# பிரதமர் சூவுக்கு

**தொழிலாளி**

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 26 | பெப்ரவரி 29, 1964 | பக்கங்கள் 10 | விலை சதம் 10

# பிரமாண்ட வரவேற்பு

# காலிபேஸ் முதல் ரத்மலானை வரை

## செங்கொடி மயம்

## லட்சோப லட்ச மக்கள் வரவேற்றனர்

**சீனத் திருநாட்டு மக்களின் சீர்த்திமிகு தலைவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கிடைத்தது.**

**சீனத்தின் வீரப் புதல்வி திருமதி சூன் யட் சனுக்கு அமோக வரவேற்பு தந்து ஈழத்து மக்கள் மரியாதை செய்தனர்.**

26-ந் திகதி காலையில், காலி வீதி — காலிபேஸ் மைதானத்திலிருந்து ரத்மலானை விமான நிலையம் வரை — செங்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இடையிடையே வாழ்த்துக்களையும், புரட்சி சுலோகங்களையும் தாங்கிய பதாகைகள் உயர்த்தப்பட்டிருந்தன.

ரத்மலானை விமான நிலயத்திலிருந்து காலி வீதியில் வந்து சேரும் சந்தியில், சூவையும், அவரது சகாக்களையும் 'வருக, வருக புதுயுகத் தலைவர்களே' என்ற வாக்கியங்கள் பதிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருந்த அலங்காரத் தோரணம், கண்கவர் காட்சியாக இருந்தது.

இப் பகுதி கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களும், கம்யூனிஸ்ட்வாலிபர்சங்க உறுப்பினர்களும் தென்னங் குருத்தோலைகளினல் செய்திருந்த வேலைப்பாடுகள், பட்டொளி வீசிப் பறந்த செங்கொடிகளுக்கு அழகு சேர்த்தன.

இதே போன்று தெஹிவலையிலும், கல்கிசையிலும் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத் தோழர்கள் சிறப்பான தோரணங்கள் அமைத்திருந்தனர்.

விமான நிலயத்தில், ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்த்துக்கள் பதிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி நின்று தோழர் சூவையும், திருமதி சன் யாட்-சனையும், சென் யீயையும் வரவேற்றனர்.

உற்சாக மிகுதியால் கூடிநின்ற திரளான மக்கள் அடிக்கடி கரகோஷம் செய்தனர்.

ராணுவ அணி வகுப்பை பார்வையிட்ட பின்னர், தோழர் சூ உரை நிகழ்த்திஞர்.

தமது உரையில், ஈழத் திருநாட்டு மக்கள், பரம்பரை பரம்பரையாக ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துப் போராடி வந்துள்ளதை சுட்டிக்காட்டி, இன்றும் போராடி வருவதை எடுத்து விளக்கிஞர்.

ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமைக்கும், உலக சமாதானத்திற்கும் நம்மிரு நாட்டு மக்களின் ஒத்துழைப்பும் அவசியமானது என்று குறிப்பிட்டார் தோழர் சூ.

வழிநெடுக தோழர் சூவை லட்சக்கணக்கான மக்கள் வரவேற்றனர்.

இந்தியப் பிற்போக்குக் கும்பலும், சில திரிபுவாதிகளும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் புசுபுசுத்தன.

சென்ற தடவையைவிட இரு மடங்கு அதிகமான மக்கள் இந்தத் தடவை தோழர் சூவை வரவேற்றுப் பூரித்தனர், சீன-இலங்கை நட்புறவும், நேசமும் நாளொரு மேனி வளர்ந்து வருவதை இவை மெய்ப்படுத்துகின்றன.

---


இப்படத்தில் இருவர் நிற்கிருர்கள். வலது பக்கத்தில் நிற்பவர்-வெவசியர், வொல்கொட், மெர்கண்டைல் கிரடிட், கொழும்பு ஏஜென்ஸிஸ், பியோ பெவரேஜஸ், வெள்ளவத்தை நெசவாலை போன்ற, இலங்கையிலுள்ள பிரதான முதலாளித்துவக் கம்பனிகளின் நிர்வாகியாக, சில வற்றில் உரிமையாளராகவும் உள்ள திருவாளர் என். யூ. ஜெவர்தனு ஆவார். இவர் இலங்கையிலுள்ள பிரபல தொழிலதிபர்களில் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இடது பக்கத்தில் நிற்பவர் யார்? ஐக்கியப் பிணைப்பில், பலம் வாய்ந்த சக்தியாகவிருந்த பெக்டரித் தொழிலாளர்களை பிளவு படுத்தி, அவர்களின் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்து, சீர்குலைவு வேலைகள் செய்து, முதலாளிகளுக்கு ஆதரவாகப் போட்டித் தொழிற் சங்கங்கள் அமைத்து உழைப்பாளர்களின் முதுகில் ஈட்டி பாய்ச்சும் போலி தொழிலாளர் தலைவர் எம். ஜி. மெண்டிஸாகும்.

இருவரினதும் கைகளில், விலைஉயர்ந்த மேல்நாட்டுக் குடிவகையான விஸ்கி உள்ளது. இருவருக்குமிடையே உள்ள நெருங்கிய நட்புறவு என்ன? இருவரும் இரகசியம் பேச என்ன விருக்கிறது?

முதலாளிகளின் தலைவர் திரு. ஜெயவர்தனு, மெண்டிஸ் அவர்களுக்கு புதிய ஆலோசனையும், புத்திமதியும் தருவது படத்தில் பதியவில்லை என்பது உண்மையே! ஆனல், முதலாளிகளின் பிரதிநிதிக்கு, அவரின் புத்திமதிக்கு மெண்டிஸ் தரும் கவனம், கேட்கும் முறை, இதில் முக்கியத்துவம் உள்ளது என்பதை யூகிக்கச் செய்கிறது.

இந்தப் புத்திமதி எத்தனை தொழிலாளர்களுக்கு நாசம் விளைவிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



---

**தலையங்கம்**

## விமான ஊடுருவல்

கடந்த திங்கட் கிழமை இந்திய ராணுவ விமானமொன்று, ரத்மலானை விமான நிலயத்தில் திடீர் பிரவேசம் செய்துள்ளது ஈழத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனப் பிரதமர் சூ என்-லாய் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு ஒரு தினத்திற்கு முன் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருப்பது பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

எவ்வித அனுமதியுமின்றி' முன்னறிவித்தலுமின்றி திடீரென இவ் விமானம் ரத்மலானையில் இறங்கக் காரணம் என்ன?

இந்த விமானத்திலிருந்தவர்கள் ஒற்றர்கள் அல்ல என்று இந்திய ஸ்தானிகராலயம் இதுவரை மறுப்புத் தெரிவிக்காதிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இது போன்று இந்திய விமானங்கள் நம் நாட்டில் எத்தனை தடவை உட்பிரவேசம் செய்திக்கின்றன? இவை பற்றி ஆட்சியினர் உடனடியாக விசாரணை செய்ய வேண்டும்.

# சீனத்து மங்கையர் திலகம்



## திருமதி சுன் யட்-சன்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள, சீன அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் தீவிர பங்கு கொண்டவரான ஸுங் சிங் லிங் (திருமதி ஸுன் யட் ஸென்) 19-ம் நூற்றுண்டின் முடிவிற் பிறந்தார். அவர் தமது பாடசாலை நாட்களை அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்களில் கழித்தபின், டாக்டர் ஸுன் யட் ஸெனின் காரியதரிசியாகத் தன் புரட்சிகர வாழ்வை ஆரம்பித்தார். அவர் 1915 அக்டோபரில் டாக்டர் ஸுன்னை மணந்தார். 1921-ல் கலகக்கார யுத்தப் பிரபுக்கள் கன்ரொன் நகரைக் குண்டு வீசித் தாக்கியதன் மூலம் டாக்டர் ஸுன்னைக் கொல்ல முயன்றபோது, அவர் (ஸுங் சிங் லிங்) எதிரிகளின் துப்பாக்கிச் சூட்டையும் கவனத்தையும் திசைதிருப்புவதற்காக வேண்டி, வீரத்துடன் நகரிலேயே பின் தங்கிநின்று, அவ்வாருக டாக்டர் ஸுன் நகரை விட்டு வெளியேறுவதைச் சாத்தியமாக்கினுர். 1925, மார்ச்சில், பீகிங் நகரில் டாக்டர் ஸுன் காலமாகிய பின்னர், ஸுங் சிங் லிங் மக்களின் பெரும் புரட்சியில் தீவிர பங்கு கொண்டு, 1926 ஜனவரியில் நடாத்தப்பெற்ற கோமின்ராங்கின் இரண்டாவது தேசிய மாநாட்டின் போது கோமின் கட்சி மத்தியக் கமிட்டியின் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1927, இலையுதிர் காலத்தில் சியாங் கே-ஷேக்கைப் பின்பற்றி வூஹானில் வாங் சிங்-வெய் புரட்சிக்குத் துரோகம் செய்தபோது, அவர் (ஸுங் சிங் லிங்) தான் டாக்டர் ஸுன்னின் புரட்சிக் கோட்பாடுகளினதும், கொள்கைகளினதும் திடமான ஆதரவாளரெனப் பிரகடனம் செய்து ஓர் அறிக்கை விடுத்து, சீன மக்கள் புரட்சியின் வெற்றியில் தனது உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்த வண்ணம் குழப்பக் காரர்களிடமிருந்து பிரிந்தார். அவர் 1927, ஆகஸ்ட் 1-ம் திகதிய நான்சாங் எழுச்சியை ஆதரித்தார். ஆனல், கடைசியில் அவர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாகி, மாஸ்கோவிற்கும், ஐரோப்பாவிற்கும் பிற இடங்களுக்கும் சென்ருர்.

### புரட்சிப் பாதை

ஐரோப்பாவிலிருந்தபோது, ஸுன் சிங் லிங் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதும், சமாதானத்தைப் பாதுகாப்பதற்குமான சர்வதேச இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு பற்றினர். 1927 டிசம்பரில் பெல்ஜியத்திலும், மறுமுறை 1929 ஆகஸ்டில் ஜெர்மனியிலும் நடைபெற்ற சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியின் மாநாடுகளில் அவர் அவற்றின் கௌரவ அக்கிராசனராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஸுங் சிங் லிங், 1931-ல், சீனுவிற்குத் திரும்பி, உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தி ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணி ஒன்றை நிறுவும் அதன் கொள்கையை உயர்த்திப் பிடிப்பதில் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பலமான ஆரவு தந்தார். வடகீழ் சீனத்தை ஜப்பான் கைப்பற்றியதையும், ஷாங்ஹாய் மீது அது தொடுத்த தாக்குதலையும் குறித்துச் சியாங் கே-ஷேக்கின் பணிந்து போதல் வாதக் கண்ணேட்டத்தையும் அவர் உறுதியாக எதிர்த்தார். சியாங் கே-ஷேக்கின் பாஸிஸப் படுகொலைகளை எதிர்க்க அவர் லூ ஹுன், ட்ஸாய் யுவான்-பெய் முதலியவர்களுடன் 1932-ல் மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கான சீன அணியை ஸ்தாபித்தார்.

இந்தக் கால கட்டத்தின் போது ஸுங் சிங் லிங் சர்வதேச பாஸிஸ-எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டு, அப்போது கோமின்ராங்கின் வெள்ளைப் பயங்கரத்தின் கீழிருந்த ஒரு நகரமான ஷங்ஹாயில் 1934-ல் நடைபெற்ற, ஏகாதிபத்தியவாத யுத்துங்களை எதிர்ப்பதற்கான கமிட்டியின் தூர கிழக்கு மாநாட்டின் தலைவரானுர்.


### ஏகாதிபத்திய எதிர்ப்பு

1935-க்குப் பின் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதம் சீனுவிற்கு எதிரான அதன் ஆக்கிரமிப்பை மேலும் உக்கிரப் படுத்தியபோது, ஸுங் சிங் லிங் கோமின்ராங்கின் ஜனநாயக நபர்களுடன் ஐக்கிய முற்று சோவியத் யூனியனுடன் கூட்டணியும் சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பும் என்ற டாக்டர் ஸுன்னின் புரட்சிகரக் கோட்பாடுகளை மீண்டும் கடைப்பிடிக்கும்படி கோமின்ராங்கிற்குப் பிரேரித்தார். இது அந்த நேரத்திற் சீனு எங்கும் பிரவகித்தெழுந்த மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு இயக்கதுக்கு ஒரு முக்கியமான உதவியாக நிரூபணமாயிற்று. 1947-ல் அவர் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான சீன மக்களின் எதிர் யுத்தத்தை உற்சாகத்துடன் ஆதரித்துக் கோமின்ராங்கின் (ஜப்பானுடன்) ஒத்தியங்குதல் வாதிகளை எதிர்த்தார். 1938-ல் அவர் சீன பாதுகாப்பு அணியின் (இது பின்னர் சீன சேமநல நிதியாக மாற்றப்பட்டது) ஸ்தாபிதத்திற்கு முயற்சியெடுத்ததுடன், தன்னை யுத்தகால வைத்திய சேவைக்கும் குழந்தைகள் பாடசாலை சேவைக்கும் அர்ப்பணித்து, ஜப்பானிய எதிர்ப்புச் சேனைக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழிருந்த விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களுக்கும் மருந்துப் பொருட்கள் அனுப்புவதற்குப் பெரும் முயற்சிகள் செய்தார்.

சீன மக்களின் முன்னேற்ற லட்சியத்திற்கும் புரட்சிக்கும் ஆற்றிய மகத்தான சேவை காரணமாக அவர் 1949-ல் சீன மக்கள் குடியரசின் மத்திய மக்கள் அரசாங்கத்தின் உப-தலைவராகத் தெரிவுசெய்ப்பட்டு, அதே நேரத்தில் சீனத்தின் மக்கள் நிவாரண நிர்வாரகத்தின் அக்ராசினர் ஸ்தானத்தையும் வகித்தார். 1954-ல் அவர் முதலாவது

—9-ம் பக்கம் பார்க்க

# சீனப் புரட்சியின் வெற்றித் தளபதி தோழர் சென்-யீ



சீனப் பிரதமருடன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தோழர் சென்-யீ, சீன மக்கள் குடியரசின் ராஜ்ய மண்டல உப-பிரதமரும், வெளி விவகார அமைச்சருமாவார். சென்-யீ 1901-ம் ஆண்டிற் பிறந்தார். அவர் 1954-ல் முதலாவது தேசிய மக்கள் காங்கிரஸ் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டு, ராஜ்ய மண்டலத்தின் உப—பிரதமராகவும் தேசிய பாதுகாப்புக் கவுன்சில் உப—அக்கிராசனராகவும் நியமிக்கப்பட்டார். 1955 செப்டம்பரில் சீன மக்கள் குடியரசின் மார்ஷல் பதவி வழங்கப்பெற்ருர். 1956 செப்டம்பரில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய மாநாட்டில் அதன் மத்திய கமிட்டி அங்கத்தவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டு, அதன் அரசியல் குழு அங்கத்தினராகவும் தெரிவுசெய்யப்பட்டார். 1958 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாவது தேசிய மக்கள் காங்கிரஸில ஐந்தாவது கூட்டத் தொடரின்போது, மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் ஸ்தாபனத்திற்கும் நியமிக்கப்பட்டார். 1959, ஏப்ரலில் இரண்டாவது தேசிய மக்கள் காங்கிரஸ் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டு, ராஜ்ய மண்டல உப-பிரதமராகவும், வெளிவிவகார அமைச்சராகவும் தேசிய பாதுகாப்புக் கவுன்சிலின் உப—அக்கிராசனராகவும் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். 1959, ஏப்ரலில் சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் மூன்ருவது தேசியக் கமிட்டியின் உப-அக்கிராசனராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# புதுவாழ்வு நோக்கிப் போராடும் ஆப்பிரிக்கா!



## நவ-ஆப்பிரிக்கா நிச்சயம் தோன்றும்

### பிரதமர் சூ என்-லாய்
[பிரயாண தொகுப்புரை]

சுதந்திர ஆப்பிரிக்கமக்கள் தங்கள் சொந்த வீட்டிற்கு எஜமானர்களாகவும், தங்கள் சொந்த அரச விவகாரங்களை நிர்வகிக்கவும் துணிகின்றனர்; அவர்கள் தங்கள் விரோதிகளைச் சிறுமைப் படுத்தவும் சகல பழைய, புதிய அடக்குமுறையாளர்களையும் எதிர்த்துச் சமரிடவும் துணிகின்றனர். இந்தப் பணிவையே அறியாத துணிவு சகல புதிதாக மேலெழும் நாடுகளினதும் மிக மிக மதிப்புள்ள பெருந்தனமாகும்.

சம்பூரண சுதந்திரத்தை வென்றெடுப்பதற்குப் பொருளாதார ரீதியிற் சுதந்திரத்தை ஈட்டுவது அவசியம். தேசிய நிர்மாணத்தில் பிரதானமாக ஒருவரின் சொந்த நாட்டின் பலத்திலேயே நம்பியிருக்கவேண்டும் வெளிநாட்டு உதவி அடுத்தபடியான துணை மட்டுமேயாகும். இதுவே ஆசிய-ஆப்பிரிக்க மக்கள் தங்கள் நடைமுறைப் போராட்டங்களிலிருந்து தொகுத்துக் கண்ட சரியான அனுபவம்.

ஏகாதிபத்தியவாதிகள் ஒரு போதும் ஆப்பிரிக்காவில் தமது தோல்விகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சில பழம் காலனியாதிக்கவாதிகள் தங்கள் காலனி ஆட்சியை நீடித்துக்கொள்ளும் முயற்சியில் நவ-காலனியாதிக்க வாதத் தந்திரங்களை நாடியுள்ளனர்; இன்னும் சிலர் தங்கள் நவ காலனியாதிக்கவாதங்களை தந்திரங்களுக்கூடாக வெகுஜனங்கள் இனங் கண்டு கொண்டதும், பழம் காலனியாதிக்கவாதிகளாகத் தமது பயங்கரத் தன்மைகளை மீண்டும் வெளிக்காட்டியுள்ளனர். நவ-காலனியாதிக்கவாதிகள் மேலும் அதிகமான கள்ளத் தந்திரங்களும் கொண்டவர்கள். போலி நடிப்பின் மூலமாக அவர்கள் பழைய காலனியாதிக்கவாதிகளின் இடங்களைப் பிடித்துக்கொள்ள முனைகின்றனர்.

ஆபிரிக்க மக்கள் விழிப்பை அதிகரித்துத் தங்கள் அணிகளை இறுகப் பிணைத்துப் போராட்டத்திற் தளராதிருக்குமளவும் அவர்கள் நிச்சயமாகச் சம்பூரண வெற்றியை ஈட்டியே தீர்வர். ஒரு சுதந்திர சுபீட்ச நவ ஆப்பிரிக்கா நிச்சயம் தோன்றும்.

ஏகாதிபத்தியத்திற்கும் பழையதும் புதியதுமான காலனியாதிக்கங்களுக்கும் எதிரான போராட்டத்திலும், தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து தத்தம் சொந்த நாடுகளைக் கட்டியெழுப்பும் இலட்சியத்திலும், என்றென்றைக்கும் சீன மக்கள் ஆப்பிரிக்க மக்களின் நம்பத்தகு நண்பர்கள்.

எங்கு ஆக்கிரமிப்பு உள்ளதோ, அங்கு எதிர்ப்பும் உள்ளது, எங்கு அடக்குமுறை உள்ளதோ அங்கு போராட்டமும் உள்ளது. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க தேசிய, ஜனநாயகப் புரட்சிகர இயக்கங்கள் மனித சரித்திரத்தை முன்னேக்கி இயக்கிச் செல்லும் ஒரு மாபெரும் சக்தியாகிவிட்டன. இது ஏகாதிபத்தியவாதிகளாலும் அவர்களைப் பின்பற்றுபவர்களாலும் தடுக்கமுடியாத, நசுக்கமுடியாத ஒன்று. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க மக்கள் புரட்சியின் பாதையில் ஏதேனும் ஒவ்வொருவிதக் கஷ்டங்களும் தடங்கல்களும் குறுக்கிடக் கூடுமாயினும் எமது சக்தி புதிதாக ஜனித்த ஒரு சக்தியானதால், கடத்தற்கரிய சக்தியாகும். ஏகாதிபத்தியமும் பழைய, புதிய காலனியாதிக்கவாதங்களும் இன்னமும் பெருத்த உடலைப் பெற்றிருந்தாலும், அது ஏற்கனவே உள்ளூற உழுத்துப் போய் விட்டது.

[சீனப் பிரதமர்சூஎன்-லாய் தமது ஆப்பிரிக்கப் பிரயாண இறுதியில் சோமாலித் தலைநகர் மொகாடஷுவில் ஆற்றிய பேருரையிலிருந்து தேர்ந்தெடுத்த சில பகுதிகள்.]



தனது ஆப்பிரிக்க நாடுகளின் விஜயத்தின்போது, பிரதமர் சூ என்-லாய் அல்ஜீரியாவுக்கும் விஜயம் செய்தார். அல்ஜீரியப் பிரதமர் பென் பெல்லாவுடன் அவர் இங்கு காணப்படுகிறார்.

## தலைமகனே வாராயோ

சீனத்துப் பெருமகனே
செம்படையின் தலைமகனே!
மானத்தின் முதல்மகனே!
மாவோவின் மறமகனே!

பொதுவுடமைக் கொள்கையுடன்
பொருதவரும் எதிரிகளை
எதுவரினும் சிதைத்துவரும்
எஃகுள்ளப் பெருந்தலைவ!

முதலாளி வர்க்கத்தை
முறியடிக்கும் பெரும்பணியில்
முதல்மகனாய் நிற்பவனே
மாக்ஸிஸத்தில் திளைத்தவனே

புதுத்திரிபு வாதமதைப்
புதைத்திடுவோம் எழுந்திடுவீர்
இதுகடமை என மாவோ
எடுத்திட்ட பாதையினை

உடனேற்ற சூ தோழா!
உயிரற்ற பத்திரிகைக்
கடதாசிப் புலியிவர்கள்
காலத்தால் மறைந்திடுவார்

கண்ணியனே! போர்க்களத்தில்
அறம்காத்த உன்செயலை
பண்பட்ட உள்ளங்கள்
பாரெல்லாம் வாழ்த்துதடா!

காற்றினிலே நீ புயலாம்
கல்மலையில் நீ இமயம்
ஆற்றினிலே நீ நைலாம்
அறிவொளியில் ஆதவனே!

தேனசுமாம் ஈழத்துத்
தெங்கிளநீர் சுவையமுதம்
பானமதாய்த் தருகின்றோம்
பண்பகமே வாராயோ!

—சுபத்திரா

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை


★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை

தொழிலாள



சீனப் பிரதமர் சூ என்-லாய்

# சூ என்-லாய்

## சீனத்தின் கீர்

## இன்றைய ஆசி

## புதிய சீனத்தின் புரட்

நா. சண்முகதாசன்

[தேசிய அமைப்பாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி]

இவ்வாரம் இலங்கைக்கு இரண்டாவது முறையாக வந்துள்ள தோழர் சூ என்—லாய் எமது வாழ்த்துக்கும் வரவேற்புக்கும் உரித்தானவர். அவர் உலகத்தின் மிகப் பெரிய நாட்டின் பிரதம மந்திரி. சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் தலைசிறந்தவர். மேதை. தாம் வாழும் காலத்திலேயே பெருமதிப்பிற்குரிய பெயர்களாகி விட்ட சீனப் புரட்சியின் நான்கு பெரும் தலைவர்களில் அவர் ஒருவர்.

### முதல் விஜயம்

காலஞ் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அழைப்பின் பேரில், எமது சுதந்திர வைபவத்தில் கலந்துகொள்ள 1957 பெப்ரவரியில் பிரதமர் சூ என்-லாய் சென்ற முறை இலங்கை வந்திருந்தார். அதற்குப் பிந்திய ஏழாண்டு காலத்தில் சூ என்-லாயினதும், அவரது நாட்டினதும் மதிப்பு பெரிதும் உயர்ந்துள்ளது. சூ என்-லாய் எளிமையும் கவர்ச்சியும், மற்றவர்களுடன் ஒப்பிட முடியாத ராஜதந்திர திறமையும் உடையதோர் உலகத்தின் தலைசிறந்த ராஜதந்திரி என்பது நண்பர்களும் எதிரிகளும் ஏற்றுக்கொள்ளும் உண்மை. மக்கள் சீனம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுவதை அமெரிக்காவும் அதன் சார்பான நாடுகளும் எதிர்ப்பதற்கு ஒரு காரணம், சூ என்-லாய் வழி ராஜதந்திரம், அமெரிக்க முறை மடைத்தனமான ராஜதந்திரத்தை தோற்கடித்து விடும் என்ற பயமாகும்.

### மதிப்பிற்குரிய நாடு

உலக மதிப்பில் சீனமும் வளர்ந்துள்ளது. கூடுதலான நாடுகள், குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவின் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள் கூடிய மதிப்புடன் ஆலோசனை பெறும் உலகப் பெரும் நாடென்ற நிலையைச் சீனம் அடைந்துள்ளது. அமெரிக்கா அதனை ஐக்கிய நாடுகள் சபைக்கு வெளியே வைத்திருக்கும் முயற்சி முறிவடையும் காலம் நெருங்கி விட்டது. மக்கள் சீனக் குடியரசை ஏற்றுக் கொள்வதெனப் பிரான்ஸ் எடுத்த தீர்மானம் சீனத்திற்கு மிகப்பெரும் ராஜதந்திர வெற்றியாகும். அமெரிக்கக் கொள்கைக்கு விழுந்த பாரதூரமான அடியாகும். மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளும், இந்தியப் பிற்போக்குவாதிகளும் சீன இந்தியப் பிணக்கைப் பாவித்துச் சீனத்தை ஆசிய ஆபிரிக்க மக்களிடமிருந்து தனிமைப் படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் அவர்களையே திருப்பி அடித்துள்ளன. சீனம் அல்ல இந்தியாவே இன்று தனிமைப் பட்டு நிற்கின்றது. அரசியல் தலைவர் ஒருவர் ஈடுபடக் கூடிய மிகச் சிறந்த நல்லுறவுப் பிரயாணத்தின் முடிவில், அநேகம் ஆபிரிக்க நாடுகளின் நல்லுறவையும், நேர்மையான நட்பையும் சீனத்திற்கு வென்றெடுத்த பின் இலங்கைக்கு வருகின்றார் சூ என்—லாய்.

### அரசியல் மேதை

அறுபத்தாறு வயதில் கூட இளமைப் பொலிவுடனும், உலகத்தில் மிகவும் அழகு மிக்கவர் என்ற வர்ணனைக்கு உரித்தாகியும் திகழும் இந்த அதிசய அரசியல் மேதை சூ என்-லாய் எத்தகையவர்?

அவர் ஒரு பலம் பொருந்திய மண்டறின் குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய பாட்டனார் மஞ்சு பரம்பரையில் உயர்தர அதிகாரி. தந்தை மிகச் சிறந்த ஆசிரியர்; தாய் நன்கு கல்வி கற்று உண்மையில் தற்கால 'இலக்கியத்தை' விரும்பிய மகத்தான பெண்மணி. சூ என்-லாயும் திறமை மிகுந்த மாணவர்; கல்விமானுக்கும் திறமைகள் அவரிடம் திகழ்ந்தன. ஆனால் அவரின் காலம் சீனத்தின் தேசிய எழுச்சியின் காலகட்டம். அவர் பரம்பரையைச் சேர்ந்த பலரைப்போல சமுதாயப் புரட்சிக்கான இயக்கத்தில் அவரும் கவரப்பட்டார்.

அவர் ஆங்கிலக்கல்வி கற்று, நான்காய் மத்தியதரப் பாடசாலையிலும், பின்னர் ரியென்ஸினிலுள்ள அமெரிக்க மிஷனரிமாரால் நடத்தப்பெற்ற நான்காய் பல்கலைக் கழகத்திலும் ''ஜனநாயகக்', கல்வி கற்றார். அவர் படிக்கும் பொழுது திறமையான மாணவரெனவும், படிப்புக்காலத்தில் மூன்றாண்டுகள் தனது திறமையால் இலவசக் கல்வி (ஸ்கொலர் ஸிப்) பெற்றார் எனவும் அறியப் படுகின்றது.

### கைது

பின், மே 4-ம் திகதி இயக்கத்துடனும், மாணவர் கலகத்துடனும் 1919 குழப்பமான நாட்கள் வந்தன. சீனத்துக்குத் தேசிய சுய நிர்ணய உரிமையை மறுத்த வேர்சயில்ஸ் ஒப்பந்தத்திற்கு எதிராகவே இவ் வெதிர்ப்புகள் எழுந்தன. மாணவர் இயக்கத்தின் ஒரு தலைவரான சூ என்-லாய் கைதுசெய்யப்பட்டு ரியென்சினில் ஓராண்டு காலம் மறியலுக் கனுப்பப் பட்டார். அதே குற்றத்திற்காக ரியென்ஸின் நோமல் கல்லூரியைச் சேர்ந்த முற்போக்கான மாணவி ஒருத்தியும் சிறையில் இருந்தாள். அப்பெண்ணே பின்னர் சூ என்-லாயின் மனைவியாகவும், நெருங்கிய தோழராகவும் திகழ்கின்றார். தனது அரசியல் வேலையின் காரணமாக அப்பெண் இன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினராகக் கடமையாற்றுகின்றார்.

விடுதலை அடைந்ததும் கல்வி கற்பதற்காக பிரான்சுக்கு சூ என்—லாய் சென்றார். மா சே-துங் உட்பட சில கம்யூனிஸ்டுகள் சீனக் கம்யூனிஸ்ட்கட்சியை 1921-ல் ஸ்தாபித்த அதே நேரத்தில், பாரிஸிலுள்ள சீனரிடையே கம்யூனிஸ்ட் கட்சியொன்றை அமைக்க சூ உதவிசெய்தார். அதேநேரத்தில் இதே கடமையை பெர்லினில் சூ-டே செய்தார். சூ பாரிஸில் இரண்டாண்டு காலமும், இங்கிலாந்தில் சில மாதங்களும் கல்வி கற்றார். பின்னர் பிரான்சுக்குச் சென்று அங்கிருந்து ஓராண்டுப் படிப்புக்காக ஜெர்மனிக்குச் சென்



றார். 19
துக்குத்
அவர் பு
ளர் என்
யது. உ
சன்யாட்
கொண்ட

அப்பொ
சிக்குத்
டிருந்தா
கட்சியுட
நாட்டுட

# ...ய்

...ரர். 1924-ல் அவர் சீனத்துக்குத் திரும்பிய பொழுது அவர் புரட்சிகர அமைப்பாளர் என்பது பிரசித்தமாகியது. உடனே கன்ரனில் சன்யாட்-செனுடன் சேர்ந்து கொண்டார். சன் யாட்-சென் என்ற கொள்கை உட்பட்ட முப்பெரும் கோள்கைகளை அவர் பிரகடனம் செய்திருந்தார்.

## ராணுவத்தலைவர்

ஆகவே, 26-வது வயதில் கன்ரன் அரசியலில் முக்கிய போவா ராணுவக் கல்லூரியின் பிரதான ரஷ்ய ஆலோசகராக இருந்தவரும், பின்னர் சோவியத் நாட்டுத் தூர கிழக்குச் செம்படையின் கமாண்டராக இருந்தவருமான ஜெனரல் புளுஞ்சரின் லாளி வர்க்கக் குடும்பத்தில் பிறந்ததனுல் தொழிலாள வர்க்கத்திலிருந்து தனித்தும், தொழிலாள வர்க்கத்தைப் பற்றிக் குறைந்த அனுபவமும் கொண்டதோர் இருபத்தெட்டு வயது இளைஞன், ஒரு தாக்குதலை எவ்வாறு நடாத்துவது என்பது பற்றி எதுவித வழிகாட்டியுமின்றி பிரதான ரஷ்ய ஆலோசகர்கள் சியாங் கே-ஷேக் பக்கமிருந்தபடியால் ஆலோசனைக்கு எவருமின்றி புரட்சித் திட்டமும் மார்க்ஸிஸ தத்துவார்த்த அறிவுமே துணையாகக் கொண்டு ஷாங்காய்க்கு வந்து சேர்ந்தார்.

மூன்று மாதங்களுக்கிடையில் கம்யூனிஸ்ட்கட்சி600,000 தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டி பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடாத்த முடிந்தது. இவ் வேலை நிறுத்தத்திற்கு ஏக ஆதரவு கிடைத்தது; வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் அரணுக சீனத்தில் இருந்த இந் நகரின் சிரத்தையற்ற மக்களுக்குப் பயமூட்டும் அனுபவமாகஇருந்தது. ஆனுல் தாக்குதல் வெற்றி காணவில்லை. ஆயுதமின்றியும், பயிற்சியின்றியும் ''நகரத்தைப் பிடிப்பது'' எங்ஙனம் என்பது தொழிலாளர்களுக்குத் தெரியவில்லை. அவர் ஆயுதம் தாங்கிய தொழிலாளர் கூட்டத்தின் அவசியத்தைப் பற்றி அனுபவமூலம் படிக்க நேர்ந்தது. இராணுவப் பிரிவினர் அவர்களுக்கு வசதி செய்தனர்.

முதலாவது வேலை நிறுத்தத்தினதும் பின்னர் நடைபெற்ற இரண்டாவது வேலை நிறுத்தத்தினது முக்கியத்துவத்தைக் குறைத்து மதித்து பழைய வடபகுதி யுத்தப் பிரபுகள் தொகையானவரைக் கொலை செய்தனர். ஆனுல் தொழிலாளர் இயக்கத்தை நிறுத்தமுடியாது போய்விட்டது. சூ என்-லாயும் மற்றும் புகழ்பெற்ற ஷாங்காய் தொழிற் சங்கத் தலைவர்களான சா சே-யென், கு சன்-சாங்,லோ யி-மிங் ஆகியவர்கள்50,000 வேலைநிறுத்த ஆதரவாளர்களைத் திரட்டுவதில் வெற்றிகண்டனர். 2000 தொண்டர்களுக்கு இரகசிய இராணுவப் பயிற்சி கொடுத்தனர். துப்பாக்கிகளை நகரத்துள் களவாகக் கொண்டு சென்று 300 ''இரும்புப் படை''யினருக்குச் சுடுதல் பயிற்சியளித்தனர். ஷாங்காய் தொழிலாளர்களிடையே இருந்த ஒரே ஆயுதப்படை இதுவேயாகும்.

1927-ம் ஆண்டு மார்ச் 21ம் திகதி கம்யூனிஸ்டுகள் பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். இவ் வேலை நிறுத்தத்தின் விளைவாகச் ஷாங்காயிலுள்ள கைத்தொழில் நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. ஸ்தாபன ரீதியான, உறுதியான 600,000 தொழிலாளர்கள் தமது வாழ்வில் முதல் முறையாக புரட்சிப் போராட்டத்தில் பங்கு பற்றினர். அவர்கள்முதலில் பொலிஸ் ஸ்டேஷன்களையும், அடுத்ததாக ஆயுத நிலையங்களையும், பின்னர் பட்டாள நிலையங்களையும் கைப்பற்றி முடிவில் வெற்றி கண்டனர். ஐயாயிரம் தொழிலாளர்களுக்கு ஆயுதம் கொடுக்கப்பட்டது; புரட்சிகரப் படை ஆறு அணிகள் உருவாக்கப்பட்டன; ''குடிமக்களின் ஆட்சி'' பிரகடனப்படுத்தப் பட்டது.

தற்காலச் சீன சரித்திரத்தில் ஏற்பட்ட அதி சிறந்த புரட்சி இதுவேயாகும்.

## கொலையிலிருந்து தப்பினுர்

இவ்வண்ணம் சியாங் கே-ஷேக் வருமுன்னரே சூ என்-லாய் ஷாங்காயை விடுதலை செய்தார். இதனுல் சியாங் கே-ஷேக் சூ என்-லாயை விரும்பவில்லை. ஒரு மாதத்தின் பின் சியாங் கே-ஷேக் கம்யூனிஸ்டுகளையும், முற்போக்குவாதிகளையும் கொலை செய்த பொழுது, ஷாங்காயில் புரட்சி ஏற்படுத்திய அபாயகரமான மனிதனின் பெயர் அவரின் எதிரிகளின் பட்டியலில் முதலாவதாக இருந்தது. சூ என்-லாயின் நெருங்கிய. தோழர்கள், ஷாங்காயின் புகழ்பெற்ற தொழிற் சங்கத் தலைவர்கள் உட்பட 5,000 கம்யூனிஸ்டுகள் கொலைசெய்யப்பட்டார்கள். சியாங் கே-ஷேக்கின் இரண்டாவது அணியினரால் சூ என்-லாய் கைது செய்யப்பட்டார். ஜெனரல் பா சுங்-சி அவரைக் கொலை செய்யுமாறு பணித்தார். பிரிவுக் கமாண்டரின் சகோதரன் வாம்போவாவில் சூ என்-லாயின் மாணவனுக இருந்தனுல் அவர் உயிர் தப்ப முடிந்தது; அவர் தப்பியோட முடிந்தது.

—-8-ம் பக்கம் பார்க்க

# ... கீர்த்திமிகு தலைவன்

## ஆசியாவின் இதயநாதம்

## ...ன புரட்சித் தலைவா வருக வருக!

**சீனத்தின் சிங்கநாதமாகத் திகழும் பிரதமர் சூ என்-லாய், இரண்டாவது முறையாக ஈழத்துக்கு விஜயம் செய்கிருர்.**

**இன்றைய உலகின் தலைசிறந்த மார்க்சிஸ-லெனினிஸ்டாகவும், வெற்றிமேல் வெற்றியீட்டி வரும் ராஜதந்திரியாகவும் திகழும் தோழர் சூவின் வாழ்வை இங்கு தோழர் சண் சுருக்கித் தந்துள்ளார்.**

...மத்தியக் ...ப்பினராகக் ...ரர்.

...ந்ததும் ... பிரான் ... சென் ... உட்பட ...கள் சீனக் ...ய 1921-ல் ...நேரத்தில், ...னரிடையே ...யொன்றை ...செய்தார், ...இதே கட... ல் சூ-ரே ... பாரிஸில் ...மும், இங்கி... ...ாதங்களும் ... பின்னர் ...ன்று அங்கி... ... படிப்புக் ...குச் செ...

அப்பொழுது தேசியப் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருந்தார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், சோவியத் நாட்டுடனும் ஒத்துழைப்புமான தலைவராகச் சூ என்-லாய் திகழ்ந்தார். அவர் வம்போவா ராணுவக் கல்லூரியின் செயலாளரானுர். மேலும், அப்பொழுது வாம் அந்தரங்கக் காரியதரிசியாகவும் திகழ்ந்தார். அப்பொழுது வாம்போவா இராணுவக் கல்லூரியின் தலைவராக இருந்த சியாங் கே-ஷேக் இவ் விளம் கம்யூனிஸ்டுடன் வேலை செய்வதை விரும்பவில்லை. ஆனுல் முற்போக்கான மாணவர்களிடையே (கடெற்) சூவுக்கு இருந்த செல்வாக்கின் காரணமாக வாம்போவா இராணுவக் கல்லூரியின் அரசியல் பகுதியின் தலைவராக அவரைச் சியாங் அமர்த்த வேண்டியிருந்தது.


## ஷாங்காய் தாக்குதல்

1925, 1926, 1927 ஆண்டுகளில் வட திசைப் படையெடுப்பு நடைபெற்றது. சன் யாட்-சென் இறந்துவிட்டார்; சியாங்கே-ஷேக் பிரதான கமாண்டராகத் தெரியப்பட்டார். ஷாங்காயில் தாக்குதல்செய்து அம் முக்கிய நகரைப் பிடிப்பதற்கு உதவுமாறு சூ என்-லாய்க்குப் பணிக்கப்பட்டது. இப் பணியைச் சூ என்-லாய் எங்ஙனம் நிறைவேற்றினுர் என்பதனைப் பற்றிய விபரம், எட்கார் சினேவின் 'சீனத்தின் மேலே செந் நட்சத்திரம்' என்ற நூலில் பின்வருமாறு உள்ளது.

''ஒழுங்கான இராணுவப் பயிற்சி அற்ற, பெரிய முத



**சீனத்தின் மும்மணிகள்**



அல்ஜீரியப் பிரதமர் பென்பெல்லாவுடன் சீனத்துப் பிரதமர் சூ என்-லாய்.

# நட்புறவு காப்போம் நேசம் வளர்ப்போம்

## இலங்கை-சீன நட்புறவு வாழ்க!

இலங்கை-சீன நட்புறவு குறித்து, சீன எழுத்தாளர் ஒருவர் எழுதியுள்ள கட்டுரையை இங்கு பிரசுரித்துள்ளோம்.

**சீன**-இலங்கை மக்களிடையே இருந்துவரும் பரம்பரையான நட்புறவு 1900-ம் ஆண்டுகட்கும், சீன சரித்திரங்களின் படி, கி.பி ஓராவது நூற்றூண்டிற்கும் ஆருவது நூற்றூண்டிற்குமிடையில், அப்பொழுது சீன சக்கிரவர்த்தியாகவிருந்த வாங் மாங் இலங்கைக்கு உத்தியோக பூர்வமானதோர் தூதுகோஷ்டியை அனுப்பி வைத்தார். 406-ம் ஆண்டு சீனத்துக்கு இவர் இலங்கையிலிருந்து வந்த முதல் தூதுவரான ரா-மோ-யி (தர்மய சாஸ்) நாங்கிங்குக்கு வந்தார். அவர் தன் கூடவே இலங்கை அரசன் சீனச் சக்கிரவர்த்திக்கு அனுப்பிய அன்பளிப்பான 1.4 மீட்டர் உயர புத்தர் சிலையையும் கொண்டுவந்தார். 410-ல் சீன புத்த பிக்குவாகிய பாகியன் இந்து சமுத்திரத்தின் 'செல்வக் களஞ்சியமாகிய' இலங்கை சேர்ந்தார். பாகியன் 399-ல் சாங்கானிலிருந்து (தற்பொழுது சியான்)

## லான்-ரியேன்

தனது பிரயாணத்தை ஆரம்பித்தார். வரண்ட பாலைவனங்களைத் தாண்டி அபாயகரமான பெலாற்றே மலைத் தொடரைக் கடந்து தென் இந்தியா சேர்ந்து அங்கிருந்து கடல்மூலம் இலங்கைக்குப் பிரயாணமானுர் அவர். பாகியன் இலங்கையில் இரண்டாண்டு காலம் தங்கியிருந்தார் பௌத்த நாடுகளில் பிரயாணம் என்ற நூலில், இலங்கையில் இருந்த சமயம் ஒரு வர்த்தகர் சினப் பட்டு விசிறியைப் புத்தர் சிலைக்கு அன்பளிப்புச் செய்ததைக் கண்டதாகவும், இலங்கையின் முன்னுல் அரசர் ஒருவர் உத்தியோக பூர்வமான தூதுகோஷ்டியொன்றைச் சீனத்திற்கு அனுப்பியதையும் அவர் குறிப்பிடுகிருர். இதிலிருந்து பாகியன் இங்கு வருவதற்கு முன்னரே, இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக நேச தொடர்புகள் இருந்துள்ளன என்பது தெரிகின்றது.

இலங்கையில் பௌத்த பண்பாடு பற்றிப் பாகியன் படித்தார். பின் சமஸ்கிருத மொழியிலிருந்த பல புத்த சாசனங்களைச் சீனத்திற்குக் கொண்டு வந்து சீன மொழியில் அவைகளை எழுதினுர். பாகியன் தனதுபௌத்தநாடுகளில்பிரயாணம் என்ற நூலிலும். பின்னர் இந்தியாவுக்கு விஜயம் செய்த புத்த பிக்குவான சுவான்-சுவாங் ராங் பரம்பரை ஆட்சியின்போது மேற்கு நாடுகள் என்ற நூலிலும் இலங்கையின் பூமிசாத்திரம் பற்றியும், அங்கு வாழும் மக்களைப் பற்றியும் விபரம் கொடுத்து, அங்கு செழித்து வளரும் புத்த சமயத்தையும், இலங்கை மக்களின் நேர்மையையும் சிக்கனத்தையும், அதன் மூலவளங்களையும், உற்பத்தியையும் போற்றி எழுதியுள்ளனர்.

பாகியனுக்குப் பின்னர் பல இலங்கைப் பிக்குகள் சீனத்திற்கு வந்தனர். 5-ம் நூற்றூண்டு தொடங்கி, சீனத்தினதும் இலங்கையினதும் உத்தியோகபூர்வமான தூதுவர் ஒருவர் பின் ஒருவராக தொடர்ச்சியாக வந்தும் போய்க் கொண்டும் இருந்தனர். வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பு வளர்ந்தது. ஆனல் 16-ம் நூற்றூண்டுக்குப்பின் மேற்கத்திய காலனி படையெடுப்பால் இத் தொடர்பு அறுந்தது.

இலங்கை சுதந்திரம் பெற்றதும், புதிய சீனம் உதயமானதும், காலனிவாதிகளும் ஏகாதிபத்திய வாதிகளும் உருவாக்கிய செயற்கைத் தடைகளை இரு நாடுகளும் உடைத்தெறிந்து தமது நேச நல்லுறவைப் புதுப்பித்தன. அவற்றின் பரம்பரையான நட்புறவு புதிய முறையில் வளர்ந்தது. 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி இலங்கை அரசாங்கம் மக்கள் சீனக் குடியரசை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டது. 1952-ல் சமத்துவம் பரஸ்பர நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ரப்பரும் அரிசியும் வியாபாரம் செய்ய ஐந்து வருட ஒப்பந்தமொன்றை இரு நாடுகளும் உருவாக்கின. 1957 ஜனவரி முடிவில் முன்னுள் இலங்கைப் பிரதமரான பண்டாரநாயக்காவின் அழைப்பின் பேரில் பிரதமர்சூ என்-லாய்இலங்கைக்கு விஜயம் செய்தார். இலங்கை அரசாங்கமும் மக்களும் அவருக்கு உற்சாகமான வரவேற்பளித்தனர். இவ் விஜயத்தின் பொழுது இரு நாடுகளின் பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடாத்தி கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டனர். இக் கூட்டறிக்கையில் இரு தரப்பினரும் சமாதான சகஜீவனத்தின் பஞ்ச சீலங்களையும் வலியுறுத்தினர்; இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையேயுள்ள நேச ஒத்துழைப்பு மேலும் வளர்வதற்கு உறுதியான அடிப்படை அமைக்கப்பட்டது. 1957 பெப்ரவரியில் சீனமும் இலங்கையும் முறையான ராஜாங்கத் தொடர்புகள் ஸ்தாபித்து, பரஸ்பரம் ஸ்தானிகர்களை அனுப்பின. 1957 செப்டம்பரில், சீன-இலங்கை அரசாங்க தூதுகோஷ்டியினரின் சிநேக பூர்வமான பேச்சுவார்த்தைகளின் பின், 1958-ம் ஆண்டுதொடக்கம் ஐந்து ஆண்டுகட்கு இலங்கையின் ரப்பர் அபிவிருத்தித் திட்டத்திற்காகச் சீனம் ரூ. 75,000,000 பொருளாதார உதவி அளிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதே நோத்தில் நீண்டகால வர்த்தக ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. 1958-ல் சீனம் இலங்கை அரசாங்கத்துக்கு குறைந்த வட்டியில் ரூ. 50,000,000 கடனுதவி அளித்தது. 1962-ல் அக்டோபர் 3-ம் திகதி சீனமும் இலங்கையும் ஐந்து வருட வர்த்தக, பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டன.

சீன-இலங்கை அரசாங்கங்களின் கூட்டு முயற்சியால் இருநாடுகளுக்குமிடையேயுள்ள வர்த்தகத் தொடர்புகள் முன்னென்றுமில்லாதவாறு வளர்ந்துள்ளன. பொருளாதார தொழில் நுட்ப ஒத்துழைப்பின் அளவும் விரிவடைந்துள்ளது. மூன்ருவது ஐந்தாண்டு வர்த்தக ஒப்பந்தத்தின்படி அரிசி, ரப்பருடன் மற்றைய பல பொருட்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பொருளாதார தொழில் நுட்ட ஒத்துழைப்பும் பெருகியுள்ளது. சீனம் இலங்கைக்குப் பல இயந்திரங்களையும், நூற்றுக்கணக்கான கைத்தறிகளையும், புகையிரதப் பெட்டிகளையும் அளித்ததுடன், தொழில் நுட்ப உதவியையும் அளித்துள்ளது. இந்த வர்த்தகத் தொடர்புகளும், பொருளாதார தொழில் நுட்ட ஒத்துழைப்பும், சமத்துவம், பரஸ்பர நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளபடியால், எமது இரு நாடுகளினதும் தேசிய பொருளாதார அபிவிருத்தி, நிர்மாணம் ஆகிய வற்றுக்கு முற்றும் உகந்ததாகும்.

1962 முடிவில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா சீனப் பிரதமர் சூ என்-லாயின் அழைப்பின்பேரில் சீனத்திற்கு நல்லுறவு விஜயம் செய்தது, சீன-இலங்கை நட்புறவுத் தொடர்புகளை மேலும் வளர்த்துள்ளது.

சீனத்துக்கும் இலங்கைக்கும் இடையே நட்புறவுத் தொடர்புகள் வளர்ந்துள்ள அதே வேளையில் அவற்றின் பண்பாடு நேச தொடர்புகளும் பெருகியுள்ளன. 1952 அக்டோபர் முதலாம் திகதி, சீன-மக்கள் குடியரசின் மூன்ருவதுஆண்டுவிழாவின்போது, இலங்கையிலுள்ள பிரபலஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட கொழும்பு நகர மண்டபக் கூட்டத்தில் இலங்கை-சீன நட்புறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. எமது இரு நாட்டு மக்களிடையே நட்புறவையும், ஒத்துழைப்பையும், விருத்தி செய்வதற்குச் சங்கம் பயன் தரும் முயற்சிகள் எடுத்துள்ள, சீனத்தில், சீன-இலங்கை நட்புறவுச் சங்கம், 1952 செப்டம்பர் 5-ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. அண்மை வருடங்களில் பல்வேறுபட்ட சீன ஸ்தாபனங்களின் அழைப்பின் பேரில், அரசியல், பொருளாதார, பண்பாடு, கல்வி, சுகாதாரத்துறையிலுள்ள பல இலங்கைப் பிரமுகர்களும், புத்த மதம், தொழிலாளர், இளைஞர். மாதர் பிரதிநிதிகளும் சீனத்துக்கு வந்துள்ளனர்; சீன மக்களால் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டுள்ளனர். அதே போன்று, சீன ஸ்தாபனங்களின் முக்கியமானவர்களும் பிரதிநிதிகளும் இலங்கை அரசாங்கத்தினதும் மக்கள் ஸ்தாபனங்களினதும் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்து, இலங்கை மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளனர். இத்தகைய பரஸ்பர நட்புறவுச் சுற்றுப் பிரயாணங்கள் இரு நாடுகளுக்குமிடையேயுள்ள பண்பாட்டுத் தொடர்புகளைப் பெருக்கி, இரு மக்களிடையேயுள்ள நட்புறவையும், நல்நலண்ணத்தையும் ஆழமாகப் பலப்படுத்தியுள்ளன.

நமது நாடுகளின் நிர்மாணத்திற்கும், ஆசிய-உலக சமாதானத்தின் பாதுகாப்பிற்கும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்திற்குமாக சீன-இலங்கை மக்கள் ஒருவரை ஒருவர் ஆதரிக்கின்றனர். ஏகாதிபத்தியவாதிகள் இதைத் தடுப்பதற்கும், சதி செய்வதற்கு பல முயற்சிகளை எடுத்த பொழுதும், சீன-இலங்கை மக்களிடையேயுள்ள நட்புறவும், இருநாடுகளிடையேயுள்ள பொருளாதார, வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகளும் மேலும் பலப்படுத்தப்பட்டு விருத்தியாக்கப்படும். இதனைச் சீர்குலைக்க எடுக்கப்படும் எந்த ஏகாதிபத்திய முயற்சியும், நிச்சயமாக முறியடிக்கப்படும்.

சீன இலங்கை மக்களிடையேயுள்ள நட்புறவு நீடு வாழ்க!

தமிழில்: தம்பி



நவசீனத்திற்கு நட்பு விஜயமளித்த திருமதி சிரிமாவோடு சீனப் பிரதமர் சூ என்-லாய்.

## இன்றைய இந்தியாவில் இடதுசாரிகளை எதிர்நோக்குவதென்ன?

# வர்க்கபோதம்-போராட்ட உறுதி ஊட்டுவதே கம்யூனிஸ்டுகளின் கடமை!

சென்ற வாரத் தொடர்

நம்மிடையே சில நல்ல காங்கிரஸ்காரர்கள் இருக்கிருர்கள். இன்று நிலைமை சரியாக இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். அரசாங்கத்தின் சரியான கொள்கைகளையெல்லாம் உள்ளிருந்தே சீர்குலைவு செய்துவரும் சிலர் இருக்கிருர்கள்; அவர்கள் 'வலதுசாரிகள்' அவர்களால் தான் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று எண்ணுகிருர்கள்.

இந்த நல்ல காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்தின் கொள்கைகள் தீவிரமானதாக வேண்டுமென்று நேர்மையாகப் போராடுகிருர்கள். வலதுசாரிகளை அரசாங்கத்திற்குள்ளிருந்தும் காங்கிரஸ் ஸ்தாபனத்தினின்றும் அகற்றுதல், கொள்கைத் துறையில் சில மாறுதல்களைச் செய்தல், பிரதம மந்திரி நேருவின் தலைமையை நீடித்திருக்கச் செய்தல்—இவையே இத்தகைய காங்கிரஸ்காரர்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது. இவர்களின் திட்டத்தில் உள்ள அடிப்படையான குறைகளை நாம் விளக்கமாகச் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. அந்தக் குறைகள் என்ன?

(1) இன்றைய காங்கிரஸ் கட்சியும் அதன் அரசாங்கமும் கையாண்டுவரும் முக்கியமான கொள்கை குறிக்கோளில் இருந்தே இன்றைய வலதுசாரி பலம் வளர்ந்துவருகிறது.

(2) இந்த கொள்கை திட்டவட்டமாக முதலாளிகளுக்கும், நிலப் பிரபுக்களுக்கும் சாதகமாக உள்ளது.

(3) பிரதம மந்திரி நேரு என்றும் சிரஞ்சீவியாக இருக்க இயலாது. அதன் காரணமாக அவருடைய தலைமையை எல்லாக் காலத்திற்கும் நீடித்து வைத்திருப்பது என்பது சாத்தியமல்ல.

(4) கொள்கையில் சிறு சிறு மாறுதல்கள் செய்து சோஷலிஸத்தை அடைவது ஒருபுறம் இருக்கட்டும். இன்றைய நிலைமையில் சிறு மாறுதலையும்கூட கண்டுவிடமுடியாது. இந்தக் குறைகளைத்தான் சோஷலிஸ்ட் காங்கிரஸ்காரர்கள் பார்க்கத் தவறுகிருர்கள்.

இவர்கள் மற்ற காங்கிரஸ்காரர்களைவிட ஆழ்ந்து சிந்தித்து வருகிருர்கள். ஓர் குறிக்கோளுக்காகப் போராடுகிருர்கள் என்பது உண்மை. ஆனுல் இவர்களுக்கு ஓர் திட்டவட்டமான சித்தாந்தம் இல்லை. ஆகவே இவர்கள் குறைசொல்லிக் கொண்டிருப்பவர்களாகவே இருப்பார்கள். எந்த வர்க்கம் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டிருக்கிறதென்பது அவர்களுக்குப் புரியவில்லை. இதை ஆழ்ந்து ஆராயும் திறன் அவர்களுக்கு இல்லை. எனவே இந்த உண்மையை உணரக்கூடிய பார்வையை, சித்தாந்தப் பார்வையை அளிப்பதும், அதற்காகப் போராடும் உறுதி ஊட்டுவதும் நமது கடமை. ஆனுல் அதற்குமுன்பு, பிறருக்கு உபதேசம் செய்வதற்கு முன்பு, க

## சந்தர்ப்பவாத கூட்டுகளை முறியடிப்போம்

இடதுசாரிகளாகிய நாம் அந்தக் குணத்தைப் பெறவேண்டுமல்லவா?

இதே விதமான வாதங்கள் சில மார்க்ஸிய வட்டாரங்களிலும் எழுகின்றன. ஆனுல் ஒரு வித்தியாசம். காங்கிரஸ்காரர்கள் நெருக்கடிக்கு கூறும் மாற்று மருந்துகள் பக்குவம் பெருததாக இருக்கின்றன. ஆனுல் நாம் கூறும் மருந்தோ விஞ்ஞான தோற்றமளிக்கிறது. அதற்குத் தேவையான தத்துவார்த்தப் போர்வையைப் போர்த்தி விடுகின்ருேம். வர்க்கப் பார்வை, முரண்பாடுகள், பிரதான எதிரி—இப்படியெல்லாம் வார்த்தைகள் போட்டு மூடிவிடுகின்ருேம். ஆளும் காங்கிரஸ் கட்சியுடன் உறவு வைத்துக்கொள்ள இடதுசாரிகளான நாம் இத்தனை சாகசங்கள் செய்வது பரிதாபமாக இருக்கிறது. அரசாங்கத்தின் ஒவ்வொரு அறிவிப்பிலும் முற்போக்கு காண்பதுதான் வேடிக்கை. இந்தப் போக்கு சிறுகச் சிறுக பின்னுேக்கிச் சென்று, சமூக ஜனநாயக சித்தாந்தப் பார்வைக்கு சென்றுவிட்டது. இது நமது புரட்சி பாரம்பரியத்துக்கே தீங்கு விளைவிக்கும்.

சிலபேர் சொல்லித்தான் கேள்விப்பட்டேன். இடதுசாரி கட்சிகளுடைய இன்றைய நிலை, 1890-ம் ஆண்டில் காங்கிரஸ் இருந்த நிலைக்கு, அதாவது மகஜர்கள் கொடுப்பது, வேண்டுகோள்கள் விடுப்பது, யாதாஸ்துக்கள் சமர்ப்பிப்பது, இது போன்ற மிக மிகச் சாந்தமான காரியங்களைச் செய்துகொண்டிருப்பதற்குச் சென்றுவிட்டது.

இந்தியா முன்புள்ள நெருக்கடிகள் இரண்டு. (1) இடதுசாரிகளின் நெருக்கடி (2) அரசாங்கத்தின் முதலாளி ஆதரவு, நிலப்பிரபுத்துவ ஆதரவுகொள்கையால் ஏற்படும் நெருக்கடி. பின்னுல் கூறிய நெருக்கடியை தீர்க்க இடதுசாரிகள் ஆட்சி பீடத்திலுள்ள காங்கிரஸ் பற்றிய தம்முடைய கணிப்பை ஆழ்ந்து புனர் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு இன்றைய இந்தியாவின் நிலைமையைப் பரிசீலனை செய்யவேண்டும்.

சென்ற பல ஆண்டுகளாக காங்கிரஸ் திட்டமிட்டும், பல திட்டங்கள் தீட்டி அமுல் நடத்தியபோதிலும், மிகப் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்த முடியவில்லை. உருக்காலை உண்டாகியிருப்பது உண்மைதான். இந்தியாவுக்கு நவீன தொழில் துறை தளம் போட்டிருப்பது உண்மைதான். பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் இருந்ததைவிட இன்று நமது தேசம் அதிகச் செல்வம் உடையதாக இருப்பது உண்மைதான், இதெல்லாம் நம் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி உள்ளதா? குறைந்தபட்ச வாழ்க்கை நிலைமை உண்டாக வேண்டுமென்றே இன்று போராட வேண்டியிருக்கிறது.

திட்டங்கள் நமது தேசத்தின் தொழில் பலத்தை அதிகரித்த போதிலும், அதன் விளைவாக சுதந்திரம் பலப்பட்டபோதிலும், நமது தேசத்தின் வறுமையையும், கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும், சாகுபடி செய்ய நிலம் இல்லாது மக்கள் அலைவதையும், விவசாய உற்பத்தி வீழ்ச்சி அடைந்திருப்பதையும், மக்களிடம் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பாதிக்கப்பட்டிருப்பதையும் அவை நீக்கவில்லை.

## கொண்டலட்சியத்தை உயர்த்திப் பிடிப்போம்

மூன்ருவது திட்டத்தின் மத்தியில் திட்ட அதிகாரிகள் தோல்வி மனப்பான்மையுடன் ராஜ்ய அரசாங்கங்களுக்கு வேண்டுகோளுக்குமேல் வேண்டுகோள் விடுகிருர்கள். 1965-ம் ஆண்டுக்குள் நிலச் சீர்திருத்தங்களை முடித்துவிட கோருகிருர்கள். இந்த கோரிக்கைகளினுல் பலன் உண்டா? சில ராஜ்ய அரசாங்கங்கள் நிலச் சீர்திருத்தங்களையே எதிர்க்கின்றன. அவை அமுலுக்கு வராமலிருக்க எல்லா சூழ்ச்சிகளையும் செய்கின்றன.

சில புள்ளி விபரங்கள் தருகிறேன். 1960-ல் விவசாய உற்பத்தி 13 கோடியே 98 லட்சம் டன். 1963-ல் இந்த உற்பத்தி 13 கோடியே 68 லட்சமாக குறைந்தது. விவசாயத் துறையில் இன்னும் பருவ கால மழையையே நம்பியிருக்கிருேம். ஆகவே மூன்ருவது திட்டத்தில் 30 சதவிகித உயர்வுக்காக மட்டுமே திட்டமிட்டோம். ஜனத்தொகை வளர்ந்துகொண்டே போகக்கூடிய இக்காலத்தில் உணவு உற்பத்தி ஆமை வேகத்தில் செல்லுமானுல் நமக்குத் தேவையான உணவுக்காக அமெரிக்காவையே சார்ந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

மற்றொரு முக்கியமான பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம். மூன்ருவது திட்டத்தில் பலருக்கு வேலை கிடைக்கும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. மனித சக்திகள் அனைத்தையும் பயன்படுத்தப்போவதாகக் கூறினுர்கள். ஆனுல் இன்று நிலைமை என்ன? 1 கோடியே 5 லட்சம் மக்களுக்கு வேலை கிடைக்கும் என்ருர்கள். ஆனுல் 50 லட்சம் பேருக்குத்தான் வேலைகொடுக்க முடிந்தது, விவசாயமல்லாத துறையில் இன்றைய திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளில் 32 லட்சம் பேருக்குத்தான் வேலைவாய்ப்பு உண்டாக்க முடிந்தது. ஆனுல் இது ஜனத்தொகை அதிகரிப்பால் வேலை கோரி வந்த புதிய நபர்கள் எண்ணிக்கையில் ஈடு செய்யப்பட்டது. வேலை கோரும்நிறுவனத்தில் பதிவான வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை சென்ற இரண்டு ஆண்டுகளில் 15 லட்சத்து 90 ஆயிரத்திலிருந்து 24 லட்சத்து 30 ஆயிரத்துக்கு உயர்ந்துள்ளது.

### தோல்விகளின் பட்டியல்!

இதிலிருந்து சிறிதளவு கூட நம்பிக்கை ஏற்படாது. உற்பத்தியின் பிரதான துறைகளில் ஆழ்ந்த கவலை அளிக்கும் நிலைமை வருடாந்தர தேசிய வருமானத்தில் திட்டமிட்ட எல்லையான 5 சத விகிதம் என்பதுகூட உயரவில்லை. அதிலும் பாதியாகக் குறைந்துள்ளது. திட்டகர்த்தாக்களே நமது பொருளாதாரத்தின் மொத்தமான வளர்ச்சியைப் பார்த்து கவலைகொள்கிருர்கள். வருங்காலம்இன்னும் மோசமாகப் போகிறது. அன்னியச் செலவாணியில் அபிவிருத்தி இல்லை. எல்லையில் ஏற்பட்டுள்ள நிலைமையின்விளைவாக பாதுகாப்புக்காக செலவழிக்கும் தொகை அதிகரிக்கிறது. அமெரிக்கா நமக்கு தரப்போகும் ஆகாய விமானப் பாதுகாப்பு முயற்சிகளால் செலவு அதிகரிக்கும். 1965-ம் ஆண்டில் நமக்கு கடன் கொடுத்த அந்நிய கடன்காரர்கள் கடனை திருப்பிக் கேட்கப் போகிருர்கள். இந்நிலையில் இந்திய ஜனநாயகத்துக்கும், அதனுடன் சோஷலிஸ பாணி சமுதாயத்திற்கும் சோதனைகாலம் வரப்போகிறது.

ஏ. கே. கோபாலன்

[இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்மிகு தலைவர்]

இந்தப் போக்குகள் ஒரு பெரிய நெருக்கடியில் கொண்டு போய்விடும். அரசாங்கத்தின் அறிக்கைகளோ இன்றைய நிலைமையை எதிர்க் கட்சிக்காரர்கள் இவ்வளவு மோசமாக சித்தரிப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறது. சென்ற 12 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியைப் போல் வேறு எங்குமே ஏற்பட்டதில்லை என்கின்றன.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் பதில்களோ, இன்னும் மோசமான தற்புகழ்ச்சி ஜம்பப் பேச்சாகும். முதலாளித்துவ வளர்ச்சியின் தலைமையிலே தோல்விகளும், அடிக்கடி நெருக்கடிகளும் ஏற்படும். காங்கிரஸ் சோஷலிஸத்தின் மேல் ஆசை கொண்டுள்ள நமது இடதுசாரி நண்பர்களின் உணர்ச்சிகளை புண்படுத்தாமல், நான் கீழ்வரும் விஷயத்தை நினைவூட்ட விரும்புகிறேன். இன்று இந்தியாலில் காணும் துன்பமும் துயரமும் நம்பிக்கையின்மையும், வீழ்ச்சியும் சோஷலிஸ பாணி என்ற போர்வைக்குள்ளே கட்டுப்பாடற்ற முதலாளித்துவம் வளர்வதின் விளைவாகும். இந்திய தொழிலாளி வர்க்கமும், நமது விவசாயிகளில் பெரும்பாலானவர்களும், மத்தியதர வர்க்கங்களும், மேற்கூறிய தோல்விகளின் விளைவாகவும், நெருக்கடியின் விளைவாகவும் பெரும் பாரத்தைச் சுமக்கின்ருர்கள்:

ஆளும் வர்க்கத்திஞலும் இன்றைய சமுதாய அமைப்பிஞலும் துன்பமடைகின்ருர்கள்; இந்த துன்பநிலைக்கு மாற்று மருந்து இல்லையா? இந்த கேள்விக்கும் பதில் இந்திய இடதுசாரிகளிடமிருந்து வரவேண்டும்.

இந்த நிலைமைக்ருச் சில இடதுசாரியினர் தரும் பதில் அவர்களை நிரந்தரமான அவமானத்தில் அமிழ்த்தக்கூடிய தாசு இருக்கிறது. மக்களிடத்திலிருந்து தனிமைப்படக்கூடிய காங்கிரஸுக்கு வலியச் சென்று ஒத்துழைப்புத் தரும் அவர்களுடைய போக்கு, மக்களுடைய வெறுப்பின் சின்னமாக விளங்கும் பிரதாப்சிங் கெய்ரான் போன்றவர்களுக்கு ஒத்துழைப்பு தரும் போக்கு, அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கைகளை விமர்சனமின்றி அப்பட்டமாக ஆதரிக்கும் போக்கு, சுதந்திரா ஜனசங் போன்ற பிற்போக்காளருக்குத்தான் உதவி செய்கிறது,

இன்றைய அதிருப்தியை புரட்சிகரமான கோஷங்களால் போக்கிவிடமுடியாது. பருகாபாத், அம்ரோகா — இன்று கோவா இதற்கு உதாரணங்களாகும். நமது மக்கள் பிற்போக்குப் பாதையில் செல்ல விரும்ப

—9-ம் பக்கம் பார்க்க

தொழிலாளி

# மொழிச்சிக்கல் தீர்க்க சர்வகட்சி மாநாடு

வருடக் கணக்காக தேசிய ஒற்றுமைக்குத் தடையாக இருந்து, தேசிய முன்னேற்றத்திற்கு இன்னல் விளைவித்து, பொதுமக்களின் அன்றன்றுட வாழ்வில் பேரபாயத்தை ஏற்படுத்தி வந்த ''மொழிப் பிரச்சினையைத்'' தீர்ப்பதற்குரிய ஒரு வழிவகை ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்

காலத்திற்குக் காலம் வகுப்புவாதக் கலவரங்களில் நாட்டை அமிழ்த்தி, உயிர்களுக்கும், சொத்து சுகங்களுக்கும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி நாட்டையே நாசப்படுத்தி வந்த இந்தப் பிரச்சினையை தீர்த்துவைக்க முயற்சியெடுப்பது பொதுவாக மக்களின் நல்வாழ்விற்காக எடுக்கப்படும் முக்கியமான ஓர் நடவடிக்கையாகும்.

தங்கள் கட்சிகளின் அரசியலுக்காகப் பாவிக்கப்பட்டு வந்த இத் தேசியப் பிரச்சினையை, பலரின் ஒத்துழைப்புடனும் முடிவுகாண்பதற்கு ஆட்சியினர் எடுத்த தீர்மானம் வரவேற்கத்தக்கது. ஆட்சியினரின் இம் முயற்சி வெற்றிபெறுவதற்கு, சகல கட்சிகளும் தேர்தல் கால ஆயுதமாக இப்பிரச்சினையை அணுகாது, எமது நாட்டு மக்களின் பொறுப்பான தேசியப் பிரச்சினையாக அதனை அணுகுவதும், எந்தப் பகுதியினருக்கும் தீங்கு விளையாத ரீதியில் தீர்வு காண்பதும் அவசியமாகும்.

சிங்களம் அரச கரும மொழி என்ற தவறற்ற கொள்கையை ஒருபுறம் ஏற்றுக் கொண்டு மறுபுறம் சிறுபான்மை மக்களுக்கு அவர் தம் மொழி குறித்து ஏற்பட்டுள்ள இன்னல்களைப் போக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவதுதான் இப் பிரச்சினையை அடியோடு ஒழித்துக் கட்டச் சரியான வழியாகும். பெரும்பான்மையினரிடையேயும் சிறுபான்மையினரிடையேயும் உள்ள வகுப்புவாதிகளிடமிருந்து—ஜாதித் துவேசத்தைத் தூண்டி நாட்டை நாசப்படுத்தும் நயவஞ்சகர்களிடமிருந்து—நாட்டைப் பாதுகாத்து தேசிய ஒற்றுமையை வளர்த்து முன் செல்வதற்கு இதுவே வழியாகும்.

★

# நாட்டு நடப்பு

## நோயாளிகளைச் சுரண்டும் டாக்டர்கள்

இவ் வருடம் ஆகஸ்டு மாதத்திலிருந்து அரசாங்க டாக்டர்கள் தனிப்பட்ட ரீதியில் வைத்தியம் செய்ய முடியாது என அரசாங்கம் எடுத்த தீர்மானம் அனைவராலும் ஆதரிக்கப்படவேண்டியது. கூடுதலாகப் பணம்கொடுத்து வைத்திய வசதிகளை அனுபவிக்கக் கூடிய ஒரு சிலருக்கு மகிழ்ச்சியளிக்காவிட்டாலும், பணமற்ற இலட்சக் கணக்கான ஏழை மக்களுக்குச் சந்தோஷம் தரும் செய்தியாகும்.

இத் தீர்மானத்தை எதிர்த்து ஸ்பெஸலிஸ்டுகள் என்று அழைக்கப்படும்விசேஷபயிற்சி பெற்ற டாக்டர்களும் மற்றவர்களும் பெரும் பிரச்சாரம் நடத்தி வருகின்றனர். ஆனால் அவர்கள், அவர்களின் கல்விக்குநாட்டுமக்களின் பணமே பெரிதும் பாவிக்கப்பட்டது; குறிப்பாக விசேஷ டாக்டர்களின் பயிற்சிக்கு பொது நிதியில் பெருந்தொகை செலவளிக்கப்பட்டுள்ளது என்பதை மறந்து விடுகின்றனர்.

தினிப்பட்ட ரீதியில் தொழில் பார்க்கலாம் என்ற சலுகையின் கீழ் இந்த டாக்டர்கள், குறிப்பாக விசேஷ டாக்டர்கள், நோயாளிகளின் பணத்தை அநியாயமாகச் சுரண்டியது மட்டுமல்லாமல், ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறவந்த வேறு ஏழை நோயாளிகளுக்குப் பெருந் தொல்லையைக் கொடுத்தனர். அரசாங்கம் இலவசமாக நடாத்தும் ஆஸ்பத்திரிகளில் அனுமதி பெறுவதற்கு டாக்டர்கள் காசு பறிப்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதே போன்று தனிப்பட்டரீதியில் தொழில் பார்க்கும் டாக்டர் மூலம் சென்ற நோயாளிக்கு மற்றைய நோயாளிகளிலும் பார்க்க கவனம் செலுத்துவதும், சலுகைகள் அளிப்பதும் தெரிந்ததே. ஆஸ்பத்திரிகளில் உள்ள மருந்துகூட பெருமளவில் வெளியே களவாடப் படுகிறது. தனிப்பட்ட ரீதியில் வைத்தியம் செய்து பணம் சுரண்டும் சலுகையை நிறுத்துவது, நல்லதோர் காரியம். ஆனல் இது மட்டும் போதாது. பணம் பெற்றுக் கொண்டு விசேஷ டாக்டர்கள் செய்த சேவையை பணமில்லாமல் செய்வித்தல் வேண்டும். இதற்கான அவசிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தல் வேண்டும்.

★

## ஏகாதிபத்திய உதவி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு கொன்சுலர் அந்தஸ்து அளிப்பதென இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவை எதிர்த்து மேற்கு ஜெர்மனி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் கண்டிக்கப்படவேண்டியவை.

கிழக்கு ஜெர்மனியை ஏற்றுக் கொள்ளுதல் கூடாதென்னும் மேற்கு ஜெர்மனியின் சதிகள் தோல்வியடையவே, அவர்கள் இலங்கைக்கு அளிக்கும் 'உதவியை' நிறுத்தி விடுவதாக மிரட்டியுள்ளனர். எண்ணெய்ப் பிரச்சினையின் போது அமெரிக்காவுக்குக் கொடுத்த, அதே பதிலையே இவர்களுக்கும் அரசாங்கம் நிச்சயமாகக் கொடுத்தல் வேண்டும்.

இலங்கை ஆாசாங்கம் ஒரு நாட்டை அங்கீகரிப்பது அதன் சுய முடிவின் படியேயன்றி மற்ற வெளிநாடுகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு அல்ல என்பதை வலியுறுத்திக் கூறுதல் வேண்டும். மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்திய வாதிகள் 'உதவி' என்ற நவீன காலனி முறை உருவத்தில் நுழைந்து நமது நாட்டை அடிமைப்படுத் முனைவது இதிலிருந்து தெளிவாகின்றது. சுரண்டல் அடிப்படையில் தனியாரின் இலாபங் கருதி அமைக்கப்பட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட முதலாளித்துவ நாடுகளின் 'உதவி'யின் பொதுவான நோக்கத்தையும் மக்கள் இதன்மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

★

## சீர்கெட்ட 'சிராவஸ்தி'

எமது நாட்டின் அலுவல்கள் அனைத்தையும் தீர்மானிப்பது பிரதிநிதிகள் சபையாகும். பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்கள் பலர் கொழும்பில் தங்கும் இடம் 'சிராவஸ்தி'. பலத்த தேர்தல் போட்டியின் பின் மக்களால் தமது சிறந்த பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களின் இவ் வாசஸ்தலத்தைப் பற்றி அண்மையில் பத்திரிகைகளில் வந்த செய்திகள் அருவருப்பூட்டுபவை.

சில அங்கத்தவர்கள் 'சிராவஸ்தியில்' மோசமாக நடந்து கொண்டது, அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் இழுக்கு ஏற்படுத்துவதுடன், பாரளுமன்றம் முழுவதையுமே அவமானத்தில் ஆழ்த்துகின்றது. அது மட்டுமல்ல, எமது நாட்டிற்கும், மக்களுக்கும் கூட பெருத்த அவமானத்தைத் தரும் செய்தியாகும்.

'சிராவஸ்தி' மோசடி பற்றி பூரணமான, நேர்மையான விசாரணை செய்யப்படுதல் வேண்டும். குற்றவாளிகள் அனைவரையும் ஈவிரக்கமின்றித் தெரிந்தெடுத்து தொகுதி மக்களுக்கும் நாட்டுக்கும் அம்பலப்படுத்தல் வேண்டும்; தக்க தண்டனை வழங்குதல் வேண்டும். இதன் மூலமே இச்சாபத்தீட்டிற்குப் பிராயச்சித்தம் காண முடியும்.

—புதினன்

# சூ என்-லாய் சீனத்தின் கீர்த்தி....

5-ம் பக்கத் தொடர்

சூ வுகானுக்கும் அதன் பின்னர் நான்சாங்குக்கும் சென்றுர். நான்காங்கில் சீன செம்படையின் சரித்திர ஆரம்பத்தில் அவர் முக்கிய பங்கு வகித்தார். அவர் அங்கிருந்து சுவாற்ருேவுக்குச் சென்ருர். அங்கு சூ என்-லாயின் தலைமையில் தென் சீனப் பெரும் துறைமுகத்தைத் தொழிலாளர்கள் கைப்பற்றி, வெளிநாட்டு துப்பாக்கி வள்ளங்கள்,உள்நாட்டு இராணுவம் ஆகியவற்றுக்கு எதிராகப் பத்து நாட்கள் தம் வசம் வைத்திருந்தனர். இதன் பின் கீர்த்தி மிகு கன்ரன் எழுச்சி நடைபெற்றது. இதில் சூ என்-லாய் முக்கிய பங்கு வகித்தார்.

## நெடும் பயணத்தில் பங்கு

கன்ரன் எழுச்சி தோற்கடிக்கப்பட்டதும், 1931-ம் ஆண்டு வரை சூ தலைமறைவாக வேலை செய்தார்; பல தடைகளையும் மீறி சோவியத் பிரதேசங்களான கியாங்கி, யுகியனுக்குச் சென்ருர். இங்கு சிறந்த தலைமைக் கமாண்டரான சூ ரே-யின் அரசியல் ஆலோசகராக அவர் செயல்பட்டார். இதன் பின்னர் சூ என்-லாயின் வாழ்வு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியுடனும் அதன் செல்வாக்குடனும், முடிவில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் சீனம் விடுதலை பெற்ற சரிதையுடனும் இணைந்து பிணைந்துள்ளது. கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகள் அனைத்திலும் சூ முக்கிய பங்கு வகித்தார். மறு கம்யூனிஸ்டுத் தலைவர்களுடன் சரித்திரப் பிரசித்தி பெற்ற நெடும் பயணத்தில் கலந்து கொண்டார். நெடும் பயணத்தின்போது அவர்கள், 6000 மைல்கள் (அமெரிக்கக் கண்ட அகலத்தின் இரு மடங்கு) கடந்து, உலகத்திலுள்ள மிகவும் கஷ்டமான புல் வெளிகளுக்கூடாவும், சில உயர்ந்த மலைகளுக்கு மேலாகவும், ஆசியாவிலுள்ள பெரிய ஆறுகளுக்குமேலாகவும்கடந்து சென்று வட மேற்கிலிருந்த புதிய கம்யூனிஸ்ட் தளத்துக்கும் பின்னர் யெனுனுக்கும் சென்றனர். இந் நாட்களில்தான் சூவின் தலைக்கு 80,000 அமெரிக்க டாலர்கள் பரிசு அளிப்பதாக சியாங் கே-ஷேக் பிரகடனப்படுத்தினுர்.

சூ என்-லாய் வாழ்வின் மிகுதிப் பகுதி சீனக் கம்யூனிஸ்டுகள் தலைமையிலிருந்து விடுபட எடுத்த வெற்றிகர முயற்சிகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக குமின்ரானுடன் 2-வது ஐக்கிய முன்னணி கூட்டியது, இறுதியில் குமின்ரானுடன் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டு தலைவர் மா சே-துங்கின் தலைமையில் முதல் முயற்சியாக ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் ஐக்கியப்பட்ட புதிய சீனத்தின் தலைவர்களாக வெற்றிகண்டு உலக விவகாரங்களில் சரித்திர பங்கு வகிக்கும் நிலைமையுடனும், நெருக்கிய தொடர்புடையது.

மக்கள் சீனக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது தொடக்கம் சூ என்-லாய் சீனப் பிரதமராகக் கடைமையாற்றுகின்ருர். அவர் சகல தேசிய மாநாடுகளிலும் சிறப்பாகத் தமது நாட்டைப்பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார். வியட்நாமில் நடைபெற்ற யுத்தத்தை நிறுத்த ஜெனீவாவில் நடைபெற்ற மாநாடில் சரி,பாண்டுங்ஆசிய, ஆபிரிக்க மாநாட்டில்சரி அவர் பங்கு முக்கியமானது. சீன நாட்டின் சமாதான, நட்புறவுக் கொள்கையை ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் சென்றபின் இலங்கைக்கு வருகிறுர் சூ. எட்கார் சினே ஒரு முறை அவரைப்பற்றிக் கூறியவாறு, ''அவர் சீனத்தில் அருமையான ஒரு பேர்வழி. உறுதியும் அறிவுத்திறனும், செயல் திறமையுடன்இணைந்த அற்புதமான மேதை' எமது நாட்டுக்குவிஜயம் செய்துள்ள, அதிசிறந்த உலகத் தலைவரான அவரை இலங்கை வரவேற்கின்றது.

வந்துவிட்டது!

# யுவசக்தி

இம்மாத யுவசக்தி சீனப் பிரதமர் தோழர் சூ என்-லாய் வருகையை ஒட்டி விசேஷ மலராக வெளிவந்துள்ளது

உங்கள் பிரதிகளுக்கு உடனே முந்துங்கள்

மானேஜர்
'யுவசக்தி'
9, டிமெல் வீதி'
கொழும்பு-2

சமாதான - சகஜீவனம்

# சீனாவின் கண்ணோட்டம் தெளிவானது

## பிரதமர் சூவின் விளக்கம்

கடந்த ஆண்டு இறுதியில் பிரிட்டிஷ் எழுத்தாளர் பிலிக்ஸ் கிரீனுக்கு, பிரதமர் சூ, டெலிவிஷன் பேட்டி அளித்தார். இப்பேட்டியின்போது, சமாதான-சகஜீவனம் பற்றி அவரிடம் கேட்கப்பட்டது. இதற்கு தோழர் சூ தந்த பதிலை இங்கு பிரசுரித்துள்ளோம்,

கேள்வி: இன்று உலகில் பலரை சஞ்சலப் படுத்துவது, யுத்தமும் சமாதானமும் குறித்துச் சீனாவின் கண்ணோட்டமே. சீனத் தலைவர்கள் ஒரு யுத்தத்தில் தங்கள் ஜனத் தொகையில் பாதியினரை இழக்க மிகவும் தயாராக உள்ளனர் என்றும், சீனா சமாதான சகவாழ்வை நிராகரிக்கிறது, மேற்குடன் (மேற்கத்திய நாடுகளுடன்) யுத்தம் ''தவிர்க்க முடியாதது'' என நம்புகிறது என்றும் நாம் எமது பத்திரிகைகளில் படிக்கிறோம். அத்துடன் சீனா-இந்த அம்சங்களை உறுதிப் படுத்துவதற்காகவே போன்று (அணு ஆயுத) பரிசோதனைத் தடை உடன்படிக்கையிற் கைச்சாத்திட மறுத்தது. இந்தச் செய்திகளிலிருந்து நாம் என்ன அர்த்தம் கொள்வது? ஓர் அணு யுத்தத்தினால் விளைவிக்கப்படக் கூடிய அழிவின் பிரமாண்டத் தன்மையை சீனா முழுதாகக் கிரகித்துக் கொள்ளவில்லை என்பது உண்மையா?

பதில்: யுத்தமும் சமாதானமும் என்ற பிரச்சினையிற் சீனாவின் கண்ணோட்டம் எப்போதும் தெள்ளத் தெளிவாக இருந்துள்ளது; நாம் சமாதானத்தை நேசிக்கிறோம், ஆக்கிரமிப்பு யுத்தங்களை எதிர்க்கிறோம். எமது கண்ணோட்டத்தில் எவரையும் சஞ்சலப் படுத்த வேண்டியது எதுவுமே இல்லை. உலகில் பல மக்களை இன்று உண்மையில் சஞ்சலப்படுத்துவது ஏகாதிபத்தியவாதிகளால், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிளிகளால் பின் பற்றப்படும் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கையே.

சீன மக்கள் ஒரு சமாதானமான சர்வதேச சூழலை தங்கள் தாய் நாட்டின் புனர் நிர்மாணத்திற்கு நல்லதான ஒன்றை விரும்புகின்றனர். சீனா அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்கள் உட்பட உலகின் ஒவ்வொரு நாட்டுடனும் பஞ்சசீலங்களின் அடிப்படையில் சமாதான சகவாழ்வை விரும்புகிறது. பஞ்சசீலங்களாவன: சுயாதிபத்தியத்திற்கும், பிரதேச ஒருமைப் பாட்டிற்கும் பரஸ்பர மதிப்பு, ஆக்கிரமியாமை, ஒவ்வொருவரின் உள் விவகாரங்களில் தலையிடாமை, சமத்துவமும் பரஸ்பர நன்மையும், சமாதான சகவாழ்வு ஆகியன. ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியம் சீன மக்களைக் குறித்து ஒரு விரோத பான்மையைத் தொடர்ந்து எடுத்துவருகிறது. அது சீனாவின் தைவான் பிரதேசத்தைத் தொடர்ந்து கைப்பற்றி வைத்திருக்கிறது. அது சீனாவைச் சுற்றியுள்ள பிரதேசங்களிற் பல ராணுவ தளங்களை வைத்திருக்கிறது. அது சீனாவின் பிராந்தியக் கடலிலும் வானிலும் ஊடுருவிய வண்ணமாகவே இருக்கிறது. சீனாவுடன் சமாதான சகவாழ்வை நிராகரிப்பது அமெரிக்க ஏகாதிபத்தியமே.

ஒருவர் சமாதானத்திற்காக உழைக்க வேண்டும், அதற்காகப் பிச்சை கேட்கக் கூடாது என்பதை, சீன மக்கள் தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து அறிவர். ஏகாதிபத்தியவாத ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கைகளுக்கு எதிரான—திடமான போராட்டத்தில் உலகின் சகல சமாதானம் விரும்பும் சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதன் மூலம் மட்டுமே உலக சமாதானம் பாதுகாக்கப்பட முடியும். இதுவே எமது உறுதியான நிலை, ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் பின்னோடிகளும் இதனை விரும்பவில்லை.

அவர்கள் எம்மைப் போர்க்குணம் கொண்டவர்களெனக் கூறிச் சீனாவை அவதூறு செய்கின்றனர், சீனா ஒரு யுத்தத்தில் தனது ஜனத்தொகையில் பாதியை இழக்கத் தயாராக உள்ளதென வலிந்துரைக்கின்றனர். சீனா ஒருபோதும் ஒரு யுத்தத்தை மூட்டாது. ஆனால் ஏகாதிபத்தியம் எம்மீது ஒரு யுத்தத்தை நிர்ப்பந்தித்துச் செலுத்துமாயின், உறுதியாக எதிர்த்து நிற்பதைத் தவிர எமக்கு வேறு மார்க்கம் இருக்காது. எது வருவதாயினும் சரி, நாம் ஒருபோதும் சரணடையவும் மாட்டோம். இறுதி வரை போரிடும் சித்தத்தைக் காண்பிப்பதன் மூலம் மட்டுமே மக்கள் ஏகாதிபத்தியத்தை கண்மூடித் தனமான சாகஸ முயற்சியிலிருந்து தடுக்கமுடியும் என நாம் நம்புகிறோம்.

ஓர் அணு உலக யுத்தம் மனித குலத்திற்குப் பிரமாண்டமான நாசத்தை விளைவிக்குமென நாம் முற்றாகத் தெளிவுகொண்டுள்ளோம். அதனால்தான் சீனா அணு ஆயுதங்களின் சம்பூரணத் தடையையும் முற்றான ஒழிப்பையும் ஈடாற்றமின்றி வேண்டி நிற்கிறது.

இன்று அமெரிக்கா (ஐக்கிய ராஜ்யங்கள்) சீனாவையும் ஏனைய சகலசமாதானம் விரும்பும் நாடுகளையும் தன் அணு ஆயுதங்களைக் கொண்டு பயமுறுத்துகிறது. அணு ஆயுத பரிசோதனைகளுக்கு ஒரு அரைகுறைத் தடைக்கான மூ-வல்லரசு உடன்படிக்கை இந்த அமெரிக்க பயமுறுத்தலை நீக்கவில்லை; அகற்கு மாறாக, அது பயமுறுத்தப்படும் நாடுகள் தங்கள் தற்காப்பை ஊறுபடுத்தும் கடப்பாடுகளை ஏற்க வேண்டுமெனக் கோருகிறது. இயற்கையாகவே சீனா இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

## சீனத்து மங்கையர் திலகம்

—2-ம் பக்கத் தொடர்

தேசிய மக்கள் காங்கிரஸ் நிரந்தரக் கமிட்டியின் உப-அக்கிராசினராகவும் தெரிவு செய்யப்பட்டார். 1955-ல் அவர் இரண்டாவது தேசிய மக்கள் காங்கிரஸ் பிரதிநிதியாகவும், சீன மக்கள் குடியரசின் உப-அதிபராகவும் தெரிவுசெய்யப் பட்டார்.

சீன மக்கள் புரட்சியை முன்னேற்றுவதிலும், சர்வதேச ரீதியை உயர்த்திப் பிடிப்பதிலும், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதிலும், ஆக்கிரமிப்பு யுத்தங்களை எதிர்ப்பதிலும் ஒரு முக்கியமான பங்கை வகித்த பல தீட்சண்ய மிக்க தத்துவ விஷயங்களை அவர் எழுதி வெளியிட்டுள்ளார். இச் சிருஷ்டிகளில் அனேகமானவை இப்போது, 1952-ல் பிரசுரிக்கப்பட்ட அவரது நவ சீனாவிற்கா்க போராட்டம் என்ற நூலிற் தொகுக்கப்பட்டுள்ளன.

ஜான்ஸிபார்

# புரட்சிகரத் தலைவனின் முதல் செய்தி!

## மாஓவின் நூல்களிலிருந்து கற்றோம்

ஜான்ஸிபாரில் மக்களின் சக்தியால் நடத்தப் பட்ட மாபெரும் புரட்சிக்குப் பின், புரட்சி வீரண் ''ஷேக் முகமது பாபு'' உம்மா கட்சித் தலைவர் (கம்யூனிஸ்ட் கட்சி) மக்கள் சீன குடியரசு தங்களின் புரட்சி சர்க்காரை அங்கீகரித்ததற்கு தன் நன்றியைத் தெரிவிக்கையில், மக்கள் சீனாவைப்பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

,,ஜான்ஸிபார் மக்கள் குடியரசு புரட்சி அரசாங்கத்தினை மக்கள் சீனா அங்கீகரித்த நிகழ்ச்சியானது, ஜான்ஸிபார் மக்களுக்கு, மிகுந்த உற்சாகத்தினையும் புதிய உத்வேகத்தினையும் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அதே சமயம், அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமையில் இயங்கும் எல்லா ஏகாதிபத்தியவாதிகளுக்கும் மாபெரும் அடியாகும் எங்கள் புரட்சி!

''ஜான்ஸிபார் மக்களும் சீனாவும் ஏகாதிபத்தியத்தினை எதிர்த்துப் போராடுவதில் ஒருவரை ஒருவர் ஆதரித்தனர், ஆதரிக்கின்றனர். கடந்த காலத்திலும்கூட இருநாட்டு மக்களிடையே தோழமை உறவு பெருகியிருந்தது. பொருளாதார உறவினையும், கலாச்சார உறவினையும் வருங்காலத்தில் இன்னும் அதிகமாக்குவோம்.

''ஆப்பிரிக்க, ஆசிய,லத்தீன் அமெரிக்காவில் உருவாகும் புரட்சிக்கு ஜான்ஸிபார் புரட்சி முதல் படியாகும்.

''ஜான்ஸிபார்மக்கள்,மக்கள் சீனாவின் மாவீரர்,மக்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் மாசேதுங்கிற்கு வாழ்த்துக்கள் அனுப்ப வேண்டும். ஏனெனில்' அவரிடமிருந்தும்' அவருடைய நூல்களிலிருந்தும் ஏராளமான படிப்பினைகளையும், தத்துவங்களையும் நாம் கற்றுக் கொண்டோம்'' என்று கூறினர்.

## வர்க்க போதம்-போராட்ட உறுதி ஊட்டுவதே கம்யூனிஸ்டுகளின் கடமை!

—7-ம் பக்கத் தொடர்

வில்லை; அவர்கள் காங்கிரஸுக்கு எதிராக வாக்களித்த காரணம் என்ன? அவர்கள் கண்முன், காங்கிரஸ் பிற்போக்கின் பிரதிபிம்பமாக விளங்குகிறது. அவர்களது துயரங்களுக்கு மூலகாரணம் காங்கிரஸும் அதன் அரசாங்கமும்தான் என்று நம்புகிறார்கள். எத்தனை காமராஜ் திட்டங்கள் வந்தாலும், சோஷலிஸத்தின்பேரில் எவ்வளவுதான் உற்சாகமளிக்க முயன்றாலும், கடவுளே வந்தாலும் காங்கிரஸின் சரிவிலிருப்பது அதைப் பாதுகாக்கமுடியாது. இடதுசாரிகளுடைய கடமை என்னவென்றால் இந்த பலதரப்பட்ட ஸ்தாபனத்திலிருந்துஏதாவதுநல்லது மிஞ்சினால் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். இதுதான் பிரச்சினை, நெருக்கடியின் வேர், காங்கிரஸ் அரசின் மக்கள் விரோத பிற்போக்கு கொள்கையில் உள்ளது என்பதை இடதுசாரிகள் உணரவேண்டும். இதுதான் இந்திய நிலைமையில் உள்ள பிரத்தியட்ச உண்மை. இதைப் புறக்கணிப்பது பேராபத்தாகும். இந்தப் பிற்போக்கு கொள்கையை முறியடிப்பதன் மூலமே நெருக்கடி வராமல் தடுக்கமுடியும்,

இதில் தனிப்பட்ட நபர்களை வைத்து சிந்திப்பதை தடுக்க வேண்டும். நமது பிரதமர் மேல் நாம் கொண்டிருக்கும் அன்பும் மரியாதையும், இங்கு பிரச்சினை அல்ல.

அந்த அன்பும்மரியாதையும் நமது மக்களின் மீதும், தேசத்தின் மீதும் நாம் வைத்துள்ள அன்பு, மரியாதையைவிட உயர்ந்ததாக இருக்கமுடியாது.

காங்கிரசின் பிற்போக்குக் கொள்கைகளை முறியடிக்க, நமது மக்களுக்கு சுபிட்ச காலத்தை உண்டாக்க, வரட்டுத் தத்துவங்களை அவை எவ்வளவு புனிதமாய் இருந்தாலும் கைவிடவேண்டும். நமது தேசத்திலுள்ள பல அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளில் மேலாதிக்கம் வகிக்கும் சந்தர்ப்பவாத அரசியல் கூட்டுகளை தடுக்கவேண்டும். பயமின்றி, இந்திய வாழ்விலுள்ள பிரத்தியட்ச உண்மையைப் பார்க்கவேண்டும். அந்த உண்மையை கற்றுணர்ந்துசரியான முடிவுக்கு வரவேண்டும். உண்மையின்அடிப்படையில்தோன்றாத—எங்கிருந்தோதோன்றும் அரசியல் பார்வை—பயனளிக்காது. பல சாதாரணஉண்மைகளை விளக்கிக்கூற வேண்டிய காலம் வந்துவிட்டது. எந்த உண்மைகளின் அடிப்படையில் லட்சியங்களின் அடிப்படையில், நாம் இளம் வயதில் நம் தேசத்திற்கும் மக்களுக்கும் சேவைசெய்ய வந்தோமோ அந்த லட்சியங்களை மீண்டும் ஊர்ஜிதம் செய்துகொண்டு சேவையில் ஈடுபட நாம் தயாராக வேண்டும் நாம் தயாரா? நமக்காக நெருக்கடி காத்திருக்காது.

—[மூலம்: செமினார், சஞ்சிகை, புதுடில்லி—தமிழாக்கம: வாசன்[

# ஐயோ! சிராவஸ்தியே!!

"சிராவஸ்தி" பற்றி பாராளுமன்றத்திலும் வெளியேயும் கடந்த சில வாரங்களில் வெளியிடப்பட்ட விஷயங்கள், அது "காமக் களியாட்டக் கூடமாக" மாற்றப்பட்டிருப்பதை மெய்ப்படுத்தின.

இக் கருத்துக்களைச் சில பாராளுமன்ற, செனட் சபை அங்கத்தவர்கள் முன்னின்று வலியுறுத்தியது, இதில் உண்மை இருப்பதைக் காட்டுகிறது. வேறு யாராவது இவைகளை வெளியிட்டிருந்தால், நாம் உதாசினம் செய்திருக்கலாம். ஆனால், "கூடத்தில்" குடியிருப்பவர்களே விஷயத்தைக் கக்கி இருப்பது நம்மை நம்பும்படி செய்கிறது.

இந்த நாட்டை பரிபாலித்து வழிநடத்திச் செல்லக்கூடிய நாட்டின் முதல்வர்களான பாராளுமன்ற அங்கத்தவர்களின் இச் செயல்கள் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் மிகப் பெரும் அவமானத்தை, அழிக்கமுடியாத பழிச்சொல்லைத் தேடித் தந்துள்ளன. இந்தக் கேடுகெட்ட செயல்களுக்குக் காரணமாகவிருந்த நபர்களை ஈழத்து நாட்டு மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

நாட்டின் நிலை போக்க, தம் குறைபோக்கப் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்த பாராளுமன்ற அங்கத்தவர்களை "சிராவஸ்தி"யில் காணச் செல்லப் பெண்கள் அஞ்சுகிறார்கள், பழிச்செல் வருமா என்று ஆண்கள் பயப்படுகிறார்கள்.

"சிராவஸ்தி"யினுள் சென்று வந்த பெண்கள் ஒருவராவது "தப்பி" வரவில்லை என்று சிலர் கருத்துத் தெரிவித்திருப்பது, பெண்களை அந்தப் பக்கமே தலைகாட்டவிடாது செய்துள்ளது. மீறிச் செல்லும் பெண்கள் வழிநெடுக "எடை போடப்பட்டு"

## ஒரு வார்த்தை

டுத் தலைமை உருவங்களில் சிலருக்கு "வெறி" பிடித்து விட்டதோ என்று எண்ணும்படி செய்கிறது.

ஒரு பெண்ணை பிரதமராகக் கெண்ட இந்த நாட்டில், அவமானத்திற்கு ஆளாவார்கள் என்பது நிச்சயம்.

"தமது மனைவியர்களைக் கூடச் சிராவஸ்திக்கு அழைத்துச் செல்வது ஆபத்தானதாக இருக்கிறது" என்று மற்றுமொரு பாராளுமன்ற அங்கத்தவர் கூறியிருப்பது, நம் நாட்டின் நல் வாழ்வுக்கும், நன்னிலைக்கும், ஒழுக்க சீலத்திற்கும் உதாரண புருஷர்களாக, வழிகாட்டிகளாக இருக்கவேண்டியவர்கள் மத்தியில் இத்தகைய நீசத்தனம் நடைபெறுவது நாட்டு மக்களை ஆத்திரம் கொள்ளச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இவை போக, சில மோசமான "வியாபாரங்களும்" அங்கு நடைபெறுவதாக எமக்குச் செய்திகள் கிட்டியுள்ளன!

இரவு நேரங்களில் 'சிராவஸ்தி' பக்கம் செல்பவர்களுக்கு, நம் நாட்டுப் பாராமன்ற அங்கத்தவர்களின் லட்சணம் நன்கு புரியும். குடிபோதையில் உழலும் அவர்களின் நிலை, "சீச்சீ", பார்க்கவே அசங்கியமானதாகும்.

'பன்றியோடு பசுங் கன்று சேர்ந்தால், அதுவும் மலம் தின்ன வேண்டியதுதான்" என்று பாட்டிகள் சொல்வார்கள். இன்று, 'கெட்டுப் போக வேண்டுமானால் சிராவஸ்திக்குப் போ' என்று தாய்மார்கள் கூறும் அளவுக்கு, பாராளுமன்ற அங்கத்தவர்கள் வாசஸ்தலத்தின் மதிப்பு "உயர்ந்துள்ளது!"

நாட்டின் அவமானச் சின்னமாக உருவாகி இருக்கும் "சிராவஸ்தி"யின் இன்றைய நிலையைப் போக்க ஆட்சியினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றேல், பாராளுமன்றம் தப்பிப் பிழைக்காது, இது நிச்சயம்.

சாட்டை

# செங்கொடிச் சங்க மாநாட்டிற்கு தயாரிப்பு

## ஆரம்ப வேலைக்கு ஆக்கக் குழு

அட்டன், தலவாக்கொல்லை மாவட்டங்களைச் சேர்ந்த செங்கொடிச் சங்க தோட்டத் தலைவர்கள் கமிட்டி உறுப்பினர்கள், மாதர் சங்க, தொண்டர்படை முக்கியஸ்தர்கள் ஆகியோர்களைக் கொண்ட கூட்டமொன்று கடந்த ஞாயிறன்று அட்டன் பிரின்ஸஸ் படமாளிகையில் தோழர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. மத்திய கமிட்டியின் சார்பாக சங்கப் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் கலந்துகொண்டார்

செங்கொடிச் சங்கத்தின் ஆண்டு மாநாட்டை அட்டனில் நடத்துவதென மத்தியக் கமிட்டி எடுத்த தீர்மானத்தை இக் கூட்டம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

மாநாடு சம்பந்தமான வேலைகளைக் கவனிப்பதற்காக கீழ்வரும் குழு தெரிவுசெய்யப்பட்டது;

### அட்டன் மாவட்டம்

தோழர்கள் ப. சத்தியவேல், ஓ. ஏ. இராமையா, எம். சுந்தரம், பொன்னுசாமி தலைவர்-திரேசியா தோட்டம், லெட்சுமண் தலைவர்-சமுத்திரவல்லித் தோட்டம், பி. தங்கராஜ்-சீனுக்கொலை தோட்டம். நாராயணன் தலைவர்-போர்டைஸ்தோட்டம், லெட்சுமண் தலைவர்-அட்டன் தோட்டம், எம். வீரமலை - மாநெலி தோட்டம், எம். சுப்பிரமணியம் தலைவர்-கவரவலைதோட்டம், நாட்சி தலைவர்-அரிசி தோட்டம், கந்தையா காரியதரிசி-வட்டவலை தோட்டம், கே. கந்தன் தலைவர்-விக்டன் தோட்டம், எஸ். பழநி-விளாத்தங்கொடைத் தோட்டம்.

### தலவாக்கொல்லை மாவட்டம்


ஐ. ரொசாரியோ பெர்ணன்டோ, கே. எல்லப்பன். கே. சண்முகம், கே. பி. வீரமுத்து தலைவர்-சின்னகொத்தமல்லி தோட்டம், ஆர். வேலு-சின்ன கட்டுகொலைத் தோட்டம், ஆர். மூக்கையா தலைவர்-மல்லியப்பூ தோட்டம், அம்மாவாசி தலைவர்-நாகசேனைத் தோட்டம், பி. கோவிந்தசாமி தலைவர்.சின்ன நாகவத்தை தோட்டம், எம். ஆர். இராசலிங்கம்-டயகம தோட்டம், எஸ். ஆர். கோவிந்தசாமி தலைவர்-புதுக்காடு தோட்டம், அழகர் மலை-ஹொலிருட் தோட்டம், கிருஷ்ணசாமி தலைவர்-பெரிய கொத்தமல்லித் தோட்டம், கருணாரட்ண-செந்துல் பத்தனைத் தோட்டம், வரதன்-வட்டகொட பனிய தோட்டம், சுப்பிரமணியம்-நானுஓயா தோட்டம், ராஜு-நித்ஸ்டேல் தோட்டம், கருப்பையா-மொஸன்ட தோட்டம்.

அட்டன், தலவாக்கொலை மாவட்டங்களைச் சேர்ந்த செங்கொடிச் சங்க அங்கத்தவர் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு ரூபா வீதம் சங்க மாநாட்டு நிதிக்கு செலுத்துவதென்றும் இக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

# பதுளை நாட்டாமைமார் வெற்றி!

## ஸ்தாபனரீதியாகப் போராட சங்கத்தில் திரண்டனர்

பதுளை வர்த்தகர்கள் கடந்த 1-2-64-ந் தேதி ஒரு மூட்டைக்கு 10 சதம் தருவதாக ஒப்புக்கொண்டு, 3 தினங்களுக்குப் பின் மறுத்ததின் காரணமாக, 4-2-64-ந் தேதி வர்த்தகர்களோடு நடந்த பேச்சுவார்த்தையின்போது நாட்டாமைமார் பிரதிநிதிகளாக தோழர் எம். பி. செல்லையாவும், தோழர் அ. ராமநாதனும் கலந்துகொண்டு நாட்டாமைமார்களின் கோரிக்கையின் அவசியத்தை வற்புறுத்தினார்கள். பேச்சுவார்த்தை 8-2-64-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதுவரைக்கும் 10 சதம் கொடுப்பதாக வர்த்தகர்கள் ஒப்புக்கொண்டார்கள்.




7-2-64-ந் தேதி பதுளை இலங்கைத் தொழிற் சங்க கிளைக் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் பதுளை நகர் நாட்டாமைத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. சங்கத்தின் அவசியதைப் பற்றி தோழர் எச். ஜி. ஏ. டி சில்வாவும், தோழர் அ. ராமநாதனும் எடுத்துக் கூறினார்கள்.

8-ந் தேதி வர்த்தகர்களோடு நடக்கும் பேச்சுவார்த்தையில் தோழர் எச். ஜி. ஏ. டி சில்வாவும், தோழர் எம். பி. செல்லையாவும் பிரதுநிதிகளாகக் கலந்து கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

8-ந் தேதி வர்த்தகர்களோடு நடந்த பேச்சுவார்த்தையில் பூரண வெற்றிகிடைத்தது. ஒரு மூட்டைக்கு 10 சதம் தருவதற்கு வர்த்தகர்கள் சம்மதித்தார்கள்.

பதுளை நகர் நாட்டாமைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக தோழர் எச். ஜீ. ஏ. டி சில்வா அவர்களும், உப-செயலாளராக தோழர் ரபாய்டீன் அஜீஸ் அவர்களும், பொருளாளராக தோழர் எல். உபாசக அப்பு அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார். கமிட்டி உறுப்பினர்களாக: தோழர்கள் ஆர். எம். குணபால, ஆர். டி. சிவலிங்கம், ஆர். எம். மார்ட்டீன், ஆர். எம். பீட்டர், ஆர். ஏ. ஜயசிங்க, ஆர். வி. மகாதுரே, பீ. சுப்பையா, எச். காதர், கே. அப்பகஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். (ந. நி)

## அடுத்த இதழில்

அனுராதபுரி வாலிபர் மாநாட்டு விபரங்கள் வெளிவரும்.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.